உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 10 வியாழக்கிழமை (24-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:179

### தம்பலகாமத்தில் புலிகள் தாக்குதல்

# கிளைமோரில் சிக்கி பஸ் சிதறியது!

# இருபது கடற்படையினர் உயிரிழப்பு!!

## மேலும் 40 துருப்பினர் காயம்

வவுனியா,மே24

**திருகோணமலை - ஹபரண வீதியில் தம்பலகாமத்துக்கு அருகே முள்ளிப் பொத்தானைப் பகுதியில் உள்ள 97ஆம் வாய்க்கால் பகுதியில் கடற் படையினர் சென்றுகொண்டிருந்த பஸ் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து நடத்திய கிளைமோர் தாக்குதலில் அந்த பஸ் தூக்கி வீசப் பட்டு சிதறியது. அதில் பயணம் செய்த கடற்படையினரில் இருபது பேர் உயிரிழந்தனர்; மேலும் நாற்பது பேர் காயமடைந்தனர். அவர்களுள் படுகாய மடைந்த பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.**

திருகோணமலையிருந்து விடு முறைக்காக வீடுகளுக்குச் செல்லும் கடற்படையினரை ஏற்றிக்கொண்டு கடற்படையினரின் வாகனத் தொடர ணியில் சென்று கொண்டிருந்த பஸ்ஸே காலை 10.30 மணியளவில் கிளைமோரில் சிக்கியதாகக் கூறப் படுகின்றது.

மதகு ஒன்றின் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டே வெடித்ததாகவும் -

கிளைமோரில் சிக்கிய பஸ் அருகில் இருந்த வயலுக்குள் தூக்கி வீசப்பட்டதாகவும் - தெரிவிக்கப்படு

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று மற்றுமொரு தாக்குதல்

### கடற்படைச் சிப்பாய் பலி

திருகோணமலை,மே24

திருகோணமலை துவரங்காட்டுப் பகுதியில் நேற்றுக்காலை 11.15 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந் தார்; மற்றுமொருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அந்த இடத்துக்கு விரைந்த மேல திகக் கடற்படையினரும் பொலீஸா ரும் சுமார் 15 நிமிடங்கள் அப்பகுதி யில் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் எனத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸுக்கு மேலும் புதிய அதிகாரங்கள்

யாழ்ப்பாணம்,மே24

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கீழ்வரும் அமைச் சுக்கு மேலதிக பொறுப்புக்கள் ஒப்ப டைக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்களன்று வெளியிடப் பட்ட விசேட வர்த்தமானி அறிவித் தல் ஒன்றின் மூலம் அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவுக்கு இந்த மேல திக அதிகாரத்தை ஜனாதிபதி வழங்கியிருக்கின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

கொழும்பு,மே24

கல்முனைப் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் கடமை முடிந்து திரும்பிக்கொண்டிருந்த 'பொலீஸ் ரிசேர்வ் கான்ஸ்டபிள்' ஒரு வர் மீது இனந்தெரியாத பிஸ்டல் குழுவினர் தாக்குதல் நடத்தினர். படுகாயமடைந்த அந்தக் கான்ஸ்ட பிள் கல்முனை ஆஸ்பத்திரியில் சேர்க் கப்பட்ட பின்னர் மரணமானார். (உ)

### வவுனியாவில் நான்கு பேரைக் காணவில்லை

வவுனியா,மே24

வவுனியா நகரப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் உட்பட நான்கு பேர் நேற்றுமுன்தினம் முதல் காணாமற்போயுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கந்தையா சிவரஞ்சனி (வயது 21), ஆர்.விமலாதேவி (வயது 39), சிவகுப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'ராவய' அலுவலகம் மீது புகைக்குண்டு வீச்சு!

கொழும்பு,மே24

கொழும்பில் இருந்து வெளியா கும் சிங்கள வார இதழான 'ராவய' பத்திரிகைக் காரியாலயம் மீது நேற் றுப் பிற்பகல் 1.30 மணியளவில் புகைக்கும் குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

தாக்குதல் குறித்து முறையிடப் பட்டதை அடுத்து, உடனடியாக அங்கு விரைந்த பொலீஸார் அக் குண்டைச் செயலிழக்கச் செய்தனர்.

இந்தத் தாக்குதலால் எந்தவிதச் சேதமும் ஏற்படவில்லை என்று தெரி விக்கப்பட்டது.

"எம்மை அச்சுறுத்தும் நோக்குட

(12ஆம் பக்கம் பார்க்க)

### இஸ்ரேல் இராணுவ நிபுணரின்

## 'கிபீர்' பற்றிய விடயங்களை கொண்ட கணனி அபேஸ்!

### கொழும்பில் நடந்துள்ள திருட்டு

கொழும்பு,மே24

கொழும்பில் தங்கி உள்ள இஸ் ரேலிய இராணுவ நிபுணர் ஒருவரின் வீட்டில் இருந்து 'கிபிர்' விமானங் களை இயக்குவது தொடர்பான தக வல்கள் அடங்கிய கணனி ஒன்று திருடப்பட்டுள்ளதாக இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

இலங்கை விமானப் படையின ருக்கு ஆலோசனைகளை வழங்கு வதற்காக இவர் இலங்கை வந்தி ருந்தார்.

இவர் தங்கி இருந்த வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத சிலர் அவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டாவது விமான சேவை நேற்று நடைபெறவில்லை

### இன்று 3 சேவைகள் நடக்கும்

யாழ்ப்பாணம்,மே24

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் நேற்று பயணிகள் விமான சேவை இரண்டு தடவைகள் நடை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட் டிருந்த போதிலும், விமானத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இரண் டாவது சேவை ரத்துச் செய்யப்பட்டது.

நேற்று நண்பகலில் பலாலியிலி ருந்து முதலாவது விமானசேவையில் செல்லும் பயணிகளை ஏற்றிக் கொண்டு ஓடுபாதையில் ஓடிய விமா னம், பின்னர் மேல் எழாமலேயே ஆரம்பஇடத்துக்கு வந்து பயணிகளை இறக்கியதாகக் கூறப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து இன்று அமைச்சரவையின் பின்னர் அறிவிப்பு?

கொழும்பு,மே24

இன்று நடைபெறும் அமைச்சர வையின் முக்கிய கூட்டத்தை அடுத்து, விடுதலைப் புலிகள் மீதான தடையைத் தற்காலிகமாக நீக்கு வது பற்றிய அறிவிப்பை அரசாங்கம் விடுக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படு வதாகக் கொழும்புச் செய்தி வட்டா ரங்களில் நேற்று பரவலாகப் பேசப் பட்டது.

புலிகள் மீதான தடை தற்காலிக மாக நீக்கப்படுவது பற்றிய அறி வித்தல் அடுத்த 48 மணி நேரத்தில் வெளியாகலாம் என்று நம்பத் தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை நேற்று தனது முதலாம் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின னர் இந்த முடிவு பற்றிய அறிவிப்பு வெளியாகும் என்றும் அந்தப் பத் திரிகை தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூல மான தீர்வைக் காண்பதற்கான தற் காலிக ஏற்பாடே இது என்று மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட் டது.

நாம் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டுமாயின் தம்மீதான அரசின் தடை நீக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருந்தனர். இத்தகைய முன் நிபந்தனைகள் எதனையும் தான் ஏற் கப்போவதில்லை என்று அரசு அறி வித்து வந்ததாயினும், இப்பொழுது மேற்கு நாடுகளின் அழுத்தங்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அரசு தனது முடிவுகளில் மாற்றங் களைச் செய்ய முன்வந்திருப்பதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

- இப்படி அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில் -

இன்றைய அமைச்சரவைக் கூட் டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப் படவிருப்பதால் அக்கூட்டத்துக்கு தவறாது சமுகம் தரும்படி சகல அமைச்சர்களும் கேட்டுக்கொள்ளப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. (உ)

## புலிகள் மீதான தடையை நீக்குவதா? அமைச்சரவைக்குள் கருத்து முரண்பாடு

கொழும்பு,மே24

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது, சமாதானப் பேச் சுக்களுக்கு உகந்த சூழலை ஏற்ப டுத்தும் நோக்குடன் யுத்தநிறுத்தம் செய்வது ஆகிய விடயங்கள் குறித்து அமைச்சரவைக்குள் கருத்து முரண் பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற அமைச சரவைக் கூட்டத்தில் இந்த விடயங் கள் தொடர்பாக ஆராயப்பட்ட போது பல முக்கிய அமைச்சர்கள் இந்தத் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த தாகக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி, அவர்கள் அரசுடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகளை நாடளாவிய ரீதியில் குறைக்கவேண்டும்

## உயர்கல்வி அமைச்சரிடம் மாவை எம்.பி. கோரிக்கை

கொழும்பு,மே24

அகில இலங்கை ரீதியில் பல்கலைக்கழக அனுமதிகளுக்கான வெட்டுப் புள்ளிகளைக் குறைப்பதன் மூலம் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு வழிசெய்ய வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா கோரினார்.

உயர்கல்வி அமைச்சர் இந்திக குணவர்த்தன தலைமையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற கல்வி அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அகில இலங்கை மட்டத்தில் 'மெரிட்' அடிப்படையிலும் மாவட்ட அடிப்படையிலும், பல்கலைக்கழகங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை வருடாவருடம் குறைந்து வருகிறது. அதிலும் போர்ச் சூழ்நிலை காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல இன்னல்களுக்கிடையில் தமது கற்றலை மேற்கொள்கிறார்கள். அகவே அவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் உதவும் வகையில் குறைந்தது போர் ஓயும் வரையிலாவது - அகில இலங்கை மட்டத்தில் அனைத்து கற்கை நெறிகளுக்கும் வெட்டுப் புள்ளிகளைக் குறைத்து அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதனால் மாவட்ட மட்டத்திலும் அதிக மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிகளைப் பெற வழி ஏற்படும்- என்று தெரிவித்தார். மாவை சேனாதிராஜாவின் இந்தக் கோரிக்கை தொடர்பாக, விரைவில் இடம்பெறவுள்ள கல்வி அமைச்சின் உயர் மட்டக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் உறுதியளித்தார். (ஓ)

### திருத்தொண்டர் விழா

யாழ்ப்பாணம், மே24

சேக்கிழார் குருபூசையை முன்னிட்டு மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் திருத்தொண்டர் விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் மானிப்பாய் இந்துக் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### யுவதி கைது

யாழ்ப்பாணம், மே24

யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த 20.ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையில் மனுக் கொடுக்கச் சென்ற யுவதி ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநகர் ஓடக்கரை வீதியைச் சேர்ந்த வின்செஸ்லோஸ் ஜீன் றெஜீனா (வயது 26) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இவர் கைது செய்யப்பட்டது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.கிளை அலுவலகத்தில் உறவினர்களினால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த யுவதி தற்போது காங்கேசன்துறையிலுள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு பொலீஸாரினால அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

### அ.அட்டை விண்ணப்பங்கள் நேற்றும் ஏற்பு

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவையின் தொடர்ச்சியாக நேற்று யாழ். செயலகத்தில் தேசிய அடையாள வழங்குவதற்கான விண்ணப்பங்கள் அடையாள அட்டைப் பிரிவினரால் பெறப்பட்டன.

இந்த விண்ணப்பங்கள் யாவும் கொழும்பிலிருந்து வருகை தந்த அதிகாரிகளினால் இன்று கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரு வாரங்களின் பின்னர் உரிய முகவரிகளுக்கு இந்த தேசிய அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்தி சேவை, புலோலியில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நடத்தப்பட்ட இடம்பெயர்சேவை போன்றவற்றில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு பல நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. (ஐ-5)

### மேலும் 2 மாணவர்கள் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,மே24

அண்மையில் அத்தியடிப் பகுதியில் சட்டத்தரணி ஒருவரின் வீட்டின் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக மேலும் இரு மாணவர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து இரு மாணவர்களையும் தலா 15 ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்வதற்கு அனுமதித்த பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு அவர்களை இம்மாதம் 30ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய 6 மாணவர்கள் இதுவரை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 4 மாணவர்களை உடனடியாக மன்றில் ஆஜராக்குமாறு பொலீஸார் உரிய பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளனர்.(உ-6-10)

# தீயணைப்பு முறைகள் பற்றி பொதுமக்களுக்கு விளக்கம்

## நகரில் விரைவில் விசேட சேவை

யாழ்ப்பாணம்,மே24

யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் படைப்பிரிவினால் யாழ். நகரில் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் நோக்குடன் தீயணைப்பு விளக்க சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தீயணைப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி மேற்கொண்டு வருவதாக யாழ்.மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

தீயணைப்புப் படைப்பிரிவுக்கு இரண்டு முதலுதவிப் பெட்டிகளும் இந்தப் பிரிவில் கடமையாற்றுபவர்களுக்கு சீருடைகளும் வழங்கப்படவுள்ளன.

தீயணைப்புப் பிரிவுக்கென ஆளணி இல்லாதபோதும் மாநகர சபை ஊழியரது உதவியுடன் இச் சேவை நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த 5 மாதங்களில் மட்டும் 7 இடங்களில் ஆபத்துக்கால தீயணைப்பு சேவை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் பதவி விலகுவதற்கு முன்னறிவிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதற்கான முன்னறிவித்தல் கடிதம் ஒன்றினை வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என்.கனகரட்ணம் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகுவதற்குத் தான் முடிவு செய்துள்ளதாகவும், இதற்கான மாற்று ஒழுங்குகளைச் செய்து தன்னை இப்பதவியிலிருந்து விடுவிக்குமாறும் கேட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஓய்வுபெற்ற இவர் தற்பொழுது மீள் நியமனத்தின் கீழ் கடமையாற்றி வருவது தெரிந்ததே.

மீள் நியமன ஒப்பந்தம் முடிவடைவதற்கு சில மாதங்கள் இருக்கின்ற போதும் அவர் இந்தப் பதவியிலிருந்து ஒதுங்குவதற்கு முடிவு செய்துள்ளார்.

கடந்த வாரம் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பணிப்பாளருக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் எதிரொலியாகவே இவர் பதவி விலகுகின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரை இப்பதவியிலிருந்து நீக்க வேண்டாமென கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்களத்தின் தலைமைச் செயலகம் மற்றும் சுகாதார அமைச்சிடம் யாழ்.வைத்தியர்கள் சங்கம், யாழ்.மாவட்ட தாதியர் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள் மற்றும் போதனா வைத்தியசாலை நிபுணர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் வலியுறுத்தியுள்ளனர். (உ-5-139)


சுழிபுரம் - பறாளாய்

**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்**

**விஷு வருஷ (2001 ஆம் ஆண்டு) மஹோற்சவ விஞ்ஞாபனம்**

**விசேட உற்சவங்கள்**

| | |
|---|---|
| ❊ கொடியேற்றம் | : வைகாசி மாதம் 11ஆம் நாள் (25.05.2001) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணி |
| ❊ வேட்டைத் திருவிழா | : வைகாசி மாதம் 20ஆம் நாள் (03.06.2001) ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணி |
| ❊ தேர்த் திருவிழா | : வைகாசி மாதம் 21ஆம் நாள் (04.06.2001) திங்கட்கிழமை மு.ப.11.30 மணி |
| ❊ தீர்த்தத் திருவிழா | : வைகாசி மாதம் 22ஆம் நாள் (05.06.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி |
| ❊ சங்காபிஷேகம் | : வைகாசி மாதம் 25ஆம் நாள் (08.06.2001) வெள்ளிக்கிழமை காலை 8.00மணி |
| ❊ வைரவர் பொங்கல் | : வைகாசி மாதம் 29ஆம் நாள் (12.06.2001) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணி |

**தினசரி உற்சவம்**

| | |
|---|---|
| காலை 7.00 மணி | - அபிஷேகம்,பூஜை, ஸ்தம்ப பூஜை |
| முற்பகல் 10.00 மணி | - வசந்த மண்டபப் பூஜை |
| பிற்பகல் 3.00 மணி | - விசேட பூஜை, ஸ்தம்ப பூஜை |
| மாலை 5.00 மணி | - வசந்த மண்டபப் பூஜை |

**தேர்த்திருவிழா நேரம்**

| | |
|---|---|
| காலை 6.00 மணி | -அபிஷேகம்,பூஜை, ஸ்தம்ப பூஜை |
| காலை 8.00 மணி | -சண்முகார்ச்சனை |
| காலை 9.30 மணி | -வசந்த மண்டபப் பூஜை |
| முற்பகல் 11.00மணி | -இரதோற்சவம் |
| மாலை 5.00 மணி | -பிராயச்சித்த அபிஷேகம் தொடர்ந்து இரவுத் திருவிழா நடைபெறும். |

ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்,
தர்மகர்த்தா சபை,
பறாளாய் - சுழிபுரம்
14.05.2001 (C/16831)

பிரம்மஸ்ரீ ச. ந. இராமச்சந்திர சர்மா
மேற்படி ஆலய அர்ச்சகர்


# குடும்பநல உதவியாளர்கள் நாளை பணிக்குத் திரும்புவர்

## பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.மாநகர சபையினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட குடும்பநல உதவியாளர்கள் நாளை முதல் மீண்டும் வழமைபோல் வேலைக்குத் திரும்புவதற்குச் சம்மதித்துள்ளனர்.

யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் முதல்வர் என்.ரவிராஜ் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பான சுமுகமான முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலில் பிரதி முதல்வர் செ.கந்தையன், சபை உறுப்பினர்களான த.சுபத்திரன், ம.மங்களநேசன், மு.தவராதன், ஆணையாளர் ஆர் இராமலிங்கம் மற்றும் குடும்பநல உதவியாளர்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சபையின் முன்னாள் ஆணையாளர் இராசா சணிகாசலத்தினால் வழங்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பின் கீழ நாளை முதல் குடும்பநல உதவியாளர்கள் பணிக்குத் திரும்புவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து இன்றைவரையான காலத்துக்குரிய சம்பளத்தை அவர்களுக்கு வழங்குவதற்கு மாநகர சபை தீர்மானித்துள்ளதாகவும் -

நிரந்தர நியமனம் வழங்கப்படாத குடும்பநல உதவியாளர்களுக்கு சேவைக்காலத்தின் அடிப்படையில் நியமனம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் -

மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் சுகாதார வைத்திய அதிகாரியாக டாக்டர் இ.தெய்வேந்திரன் பணிபுரிவது குறித்து நேற்றைய கலந்துரையாடலில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

# கொழும்பில் தீவிர தேடுதல்; தமிழர்கள் 120 பேர் கைது

## வி[illegible]ரணையின் பின் பலர் விடுவிப்பு

கொழும்பு,மே24

கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரும் பொலீஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 120 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகரினுள் ஊடுருவியிருக்கும் புலிகளைக் கண்டுபிடிக்குமுகமாகவே இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜெராட் இக்னேஸியஸ் தெரிவித்தார்.

லொட்ஜுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் என பல்வேறு பகுதிகளிலும் இந்தத் தேடுதல்கள் நடத்தப்பட்டன. இந்நடவடிக்கையின் போது கொழும்பு மத்திய பகுதியில் 30 பேரும் ஏனைய பகுதிகளில் 40 பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தற்போது இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பிந்திக் கிடைத்த தகவலின் படி கைது செய்யப்பட்டவர்களில் அநேகமானவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று தெரியவந்தது.

இதேவேளை, கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் திடீர் தேடுதல்கள் மற்றும் சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் படையினர் தெரிவித்தனர். (க)


# கண்ணீர் அஞ்சலி



**விநாயகமூர்த்தி விக்கினேஸ்வரன் (விக்கி)**

(கோபிகா அழகு மாடம் - உரிமையாளர்)

எமது சக வர்த்தக நண்பன் விக்கி அவர்களின் அகாலமரணம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

கொக்குவில் சந்தி
வர்த்தகர்கள்,
நண்பர்கள்

(88160)

# மரண அறிவித்தல்

**விநாயகமூர்த்தி விக்கினேஸ்வரன்**

(உரிமையாளர், கோபிகா பான்ஸி ஹவுஸ், கொக்குவில்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி விக்கினேஸ்வரன் நேற்று(23-05-2001) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் விநாயகமூர்த்தி - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், காந்தரூபியின் அன்புக் கணவரும், விஜிதரன், கோபிகா ஆகியோரின அன்புத் தந்தையும் சரஸ்வதி, புவனேஸ்வரி, சிவலிங்கம், (உரிமையாளர் ஞானம்ஸ பன்ஸி ஹவுஸ், யாழ்ப்பாணம்), சிவனேஸ்வரி, ஞானேஸ்வரி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவானந்தம் (உரிமையாளர் பராசக்தி அச்சகம், கொக்குவில்), வசந்தகுமார், சண்முகராசா (கீர்த்தனா ரயர் வேக்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைததுனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24-05-2001) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு தகப்பனார் வீட்டில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விநாயகமூர்த்தி,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்*

தகவல்:-
வி.சிவலிங்கம்
(சிவா)

(C/16832)-

# ஜெயலலிதா முதல்வரானதை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் மனு

சென்னை, மே 24

அ. தி. மு. க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கு தமிழக முதலமைச்சராக ஆளுநர் பாத்திமா பீவி பதவிப் பிரமாணம் செய்து வைத்ததை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட பொது நல மனுவை சென்னை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணியான வி. செல்வராஜ் என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகள் விசாரணையில் இருக்கும் போது அவரை முதலமைச்சராக்கி இருப்பது, அந்த விசாரணைகளுக்கு பெரும் குந்தகத்தை ஏற்படுத்தும் என்றும்—

சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒருவரை முதலமைச்சராக்கியிருப்பது தவறு என்றும்— மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மேற்படி மனு மீதான விசாரணையை அடுத்த மாதம் முதல் வாரத்துக்கு ஒத்திவைத்த நீதிபதிகளில் ஒருவரான கே. பி. சிவசுப்பிரமணியம், ஏற்கனவே தான் ஜெயலலிதாவுக்கு எதிரான ஒரு வழக்கில் அரசு தரப்புச் சட்டத்தரணியாக வாதிட்டிருப்பதால், இந்த மனுவை விசாரிக்கும் நீதிபதிகள் குழுவில் இடம்பெற விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார். (ஒ)

# 'பாட்ஷா' கதை - வசனத்துக்கு ஆசைப்பட்ட ரஜனி ரசிகரான சிறுவர்கள் மரத்துடன் கட்டி எரிப்பு!

காஞ்சிபுரம், மே 24

நடிகர் ரஜனிகாந்த் நடித்த 'பாட்ஷா' திரைப்படத்தின் கதை - வசனத்தை ஒலிபரப்ப வற்புறுத்திய ரஜனி ரசிகர்களான சிறுவர்கள் இருவர் உயிருடன் எரிக்கப்பட்டனர்.

ஆனாலும் அதிர்ஷ்ட வசமாகக் காப்பாற்றப்பட்ட அவர்கள் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

தமிழகத்தின் மதுராந்தகம் அருகே சித்திரவாடி குடியேற்றத்தைச் சேர்ந்த சங்கர் (வயது12), சகாதேவன்(வயது 13) ஆகியோர் இணைபிரியாத நண்பர்கள், இவர்கள் இருவரும் நடிகர் ரஜனிகாந்தின் தீவிர ரசிகர்கள்.

சம்பவதினத்தன்று அதே பகுதியைச் சேர்ந்த வெள்ளிக்கண்ணு (வயது 24), சசி (வயது 13), சண்முகம்(வயது 23) ஆகியோர் தோட்டக் குடிசை ஒன்றில் 'கானா' பாடல் கசற்றைப் போட்டுக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அந்தச் சமயத்தில் அங்கு வந்த சங்கரும், சகாதேவனும் அது போன்ற அசிங்கமான பாட்டுக்களைப்போடாமல் 'பாட்ஷா' திரைப்படக் கதை வசன கசெற்றைப் போடும்படி வற்புறுத்தினர். இதனால் இரு தரப்புக்குமிடையே தகராறு ஏற்பட்டது.

மேலும் ஆத்திரமடைந்த வெள்ளிக்கண்ணு, சசி, சண்முகம் ஆகியோர் சங்கரையும், சகாதேவனையும் அடித்து ஒரு மரத்தில் கட்டினர். பின்னர் சண்முகம் ''நான்தான்டா நாட்டாமை பாட்ஷாவின் ஆள்களுக்கு நாட்டாமை தரும் தீர்ப்பு இது தான்'' என்று கூறியபடி பனை ஓலைகளைக் கொளுத்தி கட்டப்பட்டிருந்த இருவர் மீதும் போட்டனர். சசியும், சண்முகமும் வைக்கோலை எடுத்து வந்து எரியும் தீயில் போட்டனர்.

இதனால் கொழுந்து விட்டெரிந்த தீயில் சங்கரும் சகாதேவனும் சிக்கி அலறினார்கள்.

அலறல் சத்தம் கேட்டு அயலவர்கள் அந்த இடத்துக்கு விரைந்தனர். அவர்களைக் கண்டு தீ வைத்த மூவரும் ஓடி விட்டனர். தீ அணைக்கப்பட்டு சங்கரும், சகாதேவனும் தீக்காயங்களுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

இச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்த பொலீஸார் வெள்ளிக்கண்ணு, சசி, சண்முகம் ஆகிய மூவரையும் கைது செய்தனர். (ஒ)

# 700 இலங்கையர்களுக்கு அமெரிக்கக் குடியுரிமை

வாஷிங்டன், மே 24

இலங்கையைச் சேர்ந்த 700 பேர் அமெரிக்காவில் குடியுரிமை அந்தஸ்து பெறவுள்ளனர்.

கிறீன் கார்ட் லொத்தர் திட்டத்துக்கு அமையவே இவர்களுக்கு அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்படவுள்ளது.

கிறீன் கார்ட் திட்டத்துக்கு அமைய 50 ஆயிரம் வெளிநாட்டவருக்கு அமெரிக்கா குடியுரிமை வழங்கி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆசியப் பிராந்தியத்தில் பங்களாதேஷ் முதலிடம் பெறுகிறது. (ஐ)

# இந்திய பிரதான தலைவர்களை கொல்லும் திட்டம் முறியடிப்பு

புதுடில்லி, மே 24

இந்தியப் பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி உட்பட தீவிர இந்துத்துவ அமைப்புகளின் முக்கிய தலைவர்களைக் கொலை செய்யும் திட்டமொன்றைத் தாம் முறியடித்துள்ளதாக டில்லிப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

மேற்படி திட்டத்தைச் செயற்படுத்தும் நோக்கத்துடன் இந்தியாவுக்குள் ஊடுருவிய, பாகிஸ்தானிய உளவு அமைப்பான ஐ. எஸ். ஐயைச் சேர்ந்த மூன்று பேரைத்தாம் கைது செய்துள்ளதாகவும் —

இந்திய உளவுத் துறை கொடுத்த தகவலின் பேரில் டில்லியின் ராகாப் கஞ்ச் பகுதியில் நடத்திய தேடுதலில் இவர்கள் மூவரும் பிடிபட்டதாகவும் —

டில்லிப் பொலீஸின் சிறப்புப் படையினர் தெரிவித்தனர்.

கைதானவர்களிடமிருந்து சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலீஸார் கூறினர்.

# ஈராக் மீதான தடைகளைத் தளர்த்தும் பிரிட்டனின் பிரேரணையை அதிபர் சதாம் நிராகரிப்பு

பாக்தாத், மே 24

ஈராக் மீதான சர்வதேசத் தடைகளைத் தளர்த்த வழி செய்யும், பிரிட்டனின் பிரேரணையை ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் கோபத்துடன் நிராகரித்துள்ளார்.

குவைத்தை ஆக்கிரமிக்க முயற்சித்ததற்காக, ஈராக் மீது ஐ. நா. விதித்த சர்வதேசத் தடைகள் கடந்த 11 வருடங்களாக அமுலில் உள்ளன.

இந்தத் தடைகளில் சிலவற்றைத் தளர்த்த வழி செய்யும் பிரேரணை ஒன்றை பிரிட்டன் அமெரிக்காவின் ஆதரவோடு ஐ. நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்துள்ளது.

இந்தப் பிரேரணை தொடர்பாக நேற்று முன் தினம் அதிபர் சதாம் முதல் தடவையாக கருத்து வெளியிட்டார்.



தற்போதைய தடைகளால் ஏற்படும் பாதிப்புகளை இந்தப் 'பகட்டுத் தடை தளர்த்தல்' எவ் விதத்திலும் சீர் செய்யப்போவதில்லை என்றும் —

ஈராக் மீதான அனைத்துத் தடைகளும் நீக்கப்படவேண்டும் என்றும் —

அதிபர் சதாம் தெரிவித்தார்.

ஈராக்கிய அமைச்சரவையில் பேசும் போது மிகுந்த ஆக்ரோஷத்துடன் இவற்றை சதாம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

# மேற்காசியப் பிரச்சினையில் அமெரிக்கா மீண்டும் ஈடுபாடு

வாஷிங்ரன், மே 24

மத்திய கிழக்கில் இஸ்ரேலியர்களுக்கும், பலஸ்தீனர்களுக்கும், இடையே நீண்டகாலமாக நிகழ்ந்து வரும் மோதல்களை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்காவின் புஷ் அரசு ஈடுபட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதுவர் மார்டில் இன்ரேக் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவலின் அறிவுறுத்தலின் படியே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக மார்ட்டின் தெரிவித்தார்.

இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில், வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மிச்சேல் ஆணையத்தின் அறிக்கையை அமுல்படுத்துவதற்குக் குறிப்பிட்ட கால அவகாசத்தினை நிர்ணயிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சின்தொடர்ச்சியாக, அமெரிக்க அதிகாரிகள் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தைச் சந்தித்துப் பேச உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபராகப் பில் கிளின்ரன் பதவி வகித்த சமயத்தில், மேற்காசியப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அமெரிக்கா தீவிர முயற்சிகளை மேற்கொண்டது. அதிபர் புஷ் பதவியேற்றதன் பின்னர் தற்போதுதான் மேற்காசியப் பிரச்சினையில் அமெரிக்கா ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளது. (ஒ-6)


## சாரதி தேவை

35 வயதுக்கு மேற்பட்ட — சிங்களம் பேசக் கூடிய — யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கின்றவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். காலை 7 மணி முதல் 9 மணி வரை பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சுப்பஸோ வீடியோ
38, சங்கிலியன் வீதி, நல்லூர்.

(சி/16829)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக வர்த்தகர்
ப. அம்பிகைபாகன் (ராசன்)
(உரிமையாளர் - சோதி ஸ்ரோர்ஸ்,
புகையிரத வீதி, கோண்டாவில் கிழக்கு)
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி பரஞ்சோதி மகேஸ்வரி

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வர்த்தகர்கள்,
கோண்டாவில் கிழக்கு.

(88154)


# 'ஜெட்' விமான இயந்திரம் மூலம் மின்சாரம் தயாரிக்கப் புதுவழி; இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கியது

புதுடில்லி, மே 24

பழைய 'ஜெட்' விமானங்களின் இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கியுள்ளது.

இந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் மின்சாரம், மற்றைய முறைகளில் பெறப்படும் மின்சாரத்தைவிட ஒப்பீட்டளவில் குறைந்த கட்டணத்தில் விநியோகிக்க முடியும் என்று அறிவியல் தொழிற்றுறை இணை அமைச்சர் பத்ஜித் சிங்ராவத் கூறினார்.

இந்தியன் எயார் லைன்ஸ் மற்றும் இந்திய விமானப் படை ஆகியவற்றின் சேவைகளிலிருந்து கழித்து விடப்பட்ட பழைய 'ஜெட்' விமானங்களின் இயந்திரங்கள் ஆயிரக் கணக்கில் இந்தியாவிடம் கைவசமிருப்பதால், அவற்றைப் பயன்படுத்தி மின்சாரம் பெறும் திட்டம் விரைவில் செயற்படுத்தப்படும் என்றும் ராவத் கூறினார். (ஒ)

## பா. ராமச்சந்திரன் காலமானார்

சென்னை, மே 24

தமிழக காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், 1977 இல் மொரார்ஜி தேசாயின் ஜனதாக்கட்சி மந்திரி சபையில் அமைச்சர் பதவி வகித்தவருமான பா. ராமச்சந்திரன் தனது 81 ஆவது வயதில் நேற்று முன் தினம் சென்னையில் காலமானார்.


## பிற்போடப்பட்டுள்ளது

இன்று (24 - 05 - 2001) வியாழக்கிழமை நடைபெற இருந்த ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை நலன்புரிச் சங்க வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 27 - 06 - 2001 அன்று நடைபெற உள்ளது.

நலன்புரிச் சங்கம்
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.

(சி/16833)

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுப் பாவனைப் பொருள்கள் அலுமாரி, கட்டில், செற்றி, ஸ்ரீல் அலுமாரி மின்சாரப் பாவனைப் பொருள்கள் T-V COLOUR, BLACK & WHITE போன்றவை விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 101/ 1, ஓட்டுமடம்வீதி, யாழ்ப்பாணம்.
(88076)

நெல்லியடி, திக்கம் றோட்டில் வதிரி உல்லையன் நல்லை அம்மன் கோயிலுக்கு அருகில், யாழ். நெல்லியடி, மெ. மி. த. கலவன் பாடசாலை ஒழுங்கையில் சுந்தரலிங்கம் விதானையார் வீட்டில், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நவீனரக கல்யாணக் கூறைகள், காஞ்சிபுரச் சேலைகள், கல்யாண நடன மேக்கப் செற் மற்றும் பல. தொடர்பு:- சு. சுந்தரலிங்கம் விதானையார் ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டி.
(87969)

## குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா இன Broiler குஞ்சுகள் சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள் 24 — 05 — 2001 இல் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும். தொடர்பு:- றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T. P. - 3529, 2867.
(88098)

## வீடு விற்பனைக்கு

யாழ். இந்துக் கல்லூரி சிவலிங்கப் புளியடிக்கு அருகில் இரண்டு வீடுகள் அருகருகே விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 101 1, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
(88077)

## இலகுதிருமணசேவை

1964 திருவாதிரை, செவ்வாய் 7, குற்றமுள்ள உத்தியோக மணப்பெண்ணுக்கு மணமகன் அரச, தனியார் துறையில் தேவை. சீதனமுண்டு. 1971 அத்தம் ஏரகபாவம் குறைந்த U.K. Engineer -க்கு மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(88110)

## தவறிவிட்டது

158, கன்னாதிட்டி, வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பட்டாபிராம் கிரிஜா என்பவருடைய தேசிய அ. அட்டை (இல. 817102883V), விசேட அடையாள அட்டை (இல. 0901020772) என்பனவும் இதே விலாசத்தையுடைய பட்டாபிராம் நீருஜா என்பவருடைய விசேட அ. அட்டையும் (இல. 0901020771) 20 — 05 — 2001 அன்று ஆனைப்பந்திபடியில் கைப்பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.
(88126)

கலைமதி வீதி, புத்தூரைச் சேர்ந்த பொன்னன் மாலினி என்பவருடைய விசேட அ. அட்டை (இல. 0903012613) 19. 5. 2001 அன்று அச்சுவேலி பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கலைமதி சனசமூக நிலையத்தில் ஒப்படைத்துதவவும்.
(88113)

## தேவை

சிறிய (பேபி) எக்கோடியன் தேவை. இருப்பவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வே. க. தேவகுமாரன், 918, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். T.P. 3384
(88138)

## நாடக அரங்க நிகழ்வு

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப்பேரவையும், வடமராட்சி கிழக்குப் பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் புத்தாண்டு நாடக அரங்க நிகழ்வு, எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறும். (க-173)

## கல்வி டிப்ளோமா பரீட்சை

தேசிய கல்வி நிறுவனத்தால் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான பகுதி 11 பரீட்சைகள் அடுத்த மாதம் 30 ஆம் திகதியும் ஜூலை மாதம் முதலாம் திகதியும் யாழ்ப்பாணத்தில் இரு பரீட்சை நிலையங்களில் இடம்பெறவிருப்பதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை தெரிவித்தார். (ஐ-3)

# ரணிலின் தலைமையில் விரைவில் புதிய அரசாங்கம்!

## கரு ஜயசூரிய கூறுகிறார்

கொழும்பு, மே 24

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசை ஓரங்கட்டிவிட்டு மக்களுக்கு நன்மையை அளிக்கும் அரசாங்கமொன்றை அமைப்பதக்கு ஐக்கியதேசியக் கட்சி புதிய உத்வேகத்துடன் செயற்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விரைவில் புதிய ஆட்சி அமையும்.

ஐக்கியதேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய இவ்வாறு தெரிவித்தார்.

வத்தளை ஐக்கிய இலங்கை மாதர் பேரணியினர் வத்தளை நகர மண்டபத்தில் நடத்திய மாதர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

கரு ஜயசூரிய மேலும் கூறியதாவது:

நாட்டின் சனத்தொகையில் 51 வீதமானோர் பெண்களாவர். நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குப் பெண்ணின் பங்களிப்பு மிக அவசியம். நாட்டிற்காக அவர்கள் செய்யவேண்டிய காரியங்கள் பல. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருப்பவர்கள் பெண்களே. அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்தின் தாக்கத்தை அவர்களே முதலில் உணர்வர். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. தொழில் புரியும் பெண்களுக்கான பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல. நாடு பெரியதோர் ஆபத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இந்தப் பேராபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றும் சக்தி ஐ. தே. கட்சிக்கு மட்டுமே உண்டு. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விரைவில் புதிய அரசு அமைக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ஐ-4)

## நாட்டிலுள்ள அனைத்து

# பல்கலை. கல்விசாரா ஊழியர் வேலை நிறுத்தத்திற்கு முஸ்தீபு

கொழும்பு, மே 24

நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கடமையாற்றும் 14 ஆயிரம் கல்விசாரா ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாகப் பல்கலைக்கழக தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார்.

கடந்த 5 வருடங்களாகத் தமக்கு மேலதிக ஊதியக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் அதனை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சோ பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவோ எந்த நடவடிக்கையும் இது வரை எடுத்ததாகத் தெரியவில்லை. இந்த நிலைமை தொடர்ந்தால் மிகவிரைவில் பல்கலைக்கழகங்கள் அனைத்தும் சுமுகமாக இயங்க முடியாத சூழ்நிலையை எமது வேலை நிறுத்தப் போராட்டம் ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே, தென்பகுதி பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் நீர் வழங்கல் மற்றும் மின் விநியோகப் பணி ஊழியர்கள் ஆரம்ப நடவடிக்கையாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதாகவும்—

இதனால் பல பல்கலைக்கழகங்களின் இயல்வு நிலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-6)

## மல்லாகத்தில் கண்காட்சி

தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கண்காட்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இந்தக் கண்காட்சி இடம்பெறும். (க-152)

# புலிகள் மீதான தடையை நீக்கி உடன் பேச்சை ஆரம்பிக்குக!

## அரசிடம் றுகுணு மக்கள்கட்சி கோரிக்கை

கொழும்பு, மே 24

விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கி யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும்.

—இவ்வாறு றுகுணு மக்கள் கட்சியின் செயலாளர் அருண சொய்சா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 20 வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தால் தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் மக்களும் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர்.

நடைபெற்றுவரும் யுத்தத்துக்கு அடிப்படைக் காரணமான இனவாதப் போக்கை அனைவரும் கைவிட்டு, ஒரு யதார்த்தமான சூழ்நிலையில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தீர்வுகளை எடுக்கவேண்டும்.

இதன் மூலம் முரண்பட்டுப் போயுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான உறவைச் சுமுகமாக மாற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை

திருமதி சரசுவதிப்பிள்ளை தர்மலிங்கம்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி கார்த்திகேசு இராசம்மா**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
யா| மீசாலை விக்கினேசுவர ம.வி.

(88134)

## ஆசிரிய கலந்துரையாடல்

1977 ஆம் ஆண்டு ஏப்ரல்—டிசெம்பர் மாத காலத்தில் ஆசிரிய முதல் நியமனத்தையும், 1980 — 1982 மூன்றாண்டு கால ஆசிரிய கலாசாலைப் பயிற்சி நெறியையும் மேற்கொண்ட, 2000-12-31 இல் 50வயதைப் பூர்த்தி செய்யும் ஆசிரியர்களின், ஆசிரிய சேவை தரம் 1க்கான உள்வாங்கல் தொடர்பான கலந்துரையாடல் ஆரியகுளம் சந்தி, யாழ். உயர் கல்லூரியில் எதிர்வரும் (26-05-2001) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. க. குகவேள்,
திரு. சு. அருள்தாஸ்.

(88136)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணிலே மலர்ந்தது 07 — 01 — 1927

விண்ணுக் விரைந்தது 24 — 05 — 1996

### அமரர் கந்தன் நல்லான் பற்றிக்

எமது குடும்பத்தின் குலவிளக்கே!
எம்மை சீர், சிறப்புடன் வாழவைத்த எம் தந்தையே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறக்க முடியுமா உங்களை?

தங்களின் ஆன்மா சாந்திபெற ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

குசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (87788)

## சேவை நலன் பாராட்டல்

**திருமதி மேரிமாகிறற் அலிஸ் யோகராசா**
(B.A. Dip in Ed, S.L.T.S. Class- 1. )

அவர்கள் எமது பாடசாலையில் பதின்மூன்று ஆண்டுகள் அரும்பணியாற்றி ஓய்வு பெறுவதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு, அவர் தம்குடும்ப சகிதம் சகல நலன்களுடனும் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா| கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்.

(88135)

உதயன்

## திருப்பத்தினால் வந்த துணிச்சல்

பிரிட்டனில் இலங்கைத் தூது வராக இப்போது பணிபுரிபவர் மங்கள முனசிங்கா. இவர் இதற்கு முதல் இந்தியாவில் இலங்கைத் தூதுவராக இருந்தவர்.

ராஜதந்திர சேவைக்குச் செல்வதற்கு முன்னர் இவர் ஓர் அரசியல்வாதி. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர். இவை மட்டுமல்ல அவர் அமர்ந்திருந்த கதரைகள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைக குத் தீர்வு ஒன்றை வகுப்பதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவராக இருந்தவர். பிரேமதாசா காலத்தில் அமைக்கப்பட்டிருநத மேற்படி நாடாளுமன்றத் தெரிவுக் குழு சுமார் இரண்டு வருடங்களாகக் கூடி ஆராய்ந்து ஓர் அறிக்கையைத் தயாரித்திருந்தது.

ஒற்றையாட்சி முறைக்குள்ளேயே இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பது அந்தக் குழுவின் சிபார்சாக அமைந்திருந்தது. எனினும் மங்கள தலைமையிலான தெரிவுக் குழுவின் அறிக்கை பரிசீலனைக்கோ அல்லது விவாதத்திற்கோ எடுக்கப்படவில்லை.

மங்கள முனசிங்கா தலைமையிலான தெரிவுக் குழு செயற்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகளுடன் பேசாமலே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற கருத்தே மேலோங்கி நின்றது. விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள். அவர்களை போரின் மூலம் அழித்து விடலாம் - ஜனநாயக அல்லது மிதவாதக் கட்சிகள் என்று பட்டம் கட்டியுள்ள தமிழ்க் கட்சிகளை அனைத்துக் கொண்டு ஒற்றையாட்சிக்குக் கீழ் அதிகாரப் பரவல் என்ற பெயரில் தமிழர்களுக்குச் சில சலுகைகளை வழங்கினால் சமாளித்து விடலாம்- என்ற எண்ணமே அப்போது தென்னலங்கை அரசியல் தலைவர்களிடம் விரவி இருந்தது.

இப்போது நிலைமை முற்றாக மாறிவிட்டது. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது. விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் அரசியல் தீர்வு எதனையும் கண்டு நடைமுறைப்படுத்த இயலாது என்ற நிலைப்பாட்டுக்குத் தென்னிலங்கைத் தலைவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

போர் பெரும் அழிவைத் தந்துள்ளது. அதனை எப்படியேனும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். விடுதலைப் புலிகளை அனுசரிக்காமல், அரவணைக்காமல் போர் முடிவுக்கு வராது; அரசியல் தீர்வும் காணமுடியாது என்ற நிலைப்பாட்டுக்கு அவர்கள் வந்துள்ளனர். இது எதிர்பாராத ஒரு மாற்றம்.

இத்தகைய பின்னணியில், சமாதானத் தீர்வுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சிங்கள தீவிரவாதச் சக்திகளையும் அவர்களைச் சார்ந்த பௌத்த பிக்குகளையும் சாடி, கண்டித்து கருத்து வெளியிட்டிருக்கிறார் மங்கள முனசிங்கா.

தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாமல் இருப்பதற்கு, இனப்பிரச்சினை தீராது தொடர்வதற்கு பிரதான காரணஸ்தர்கள் பௌத்த பிக்குகள் - பௌத்த மகா சங்கத்தினர் - என்பது இப் போது இலங்கையின் அரசியல் வரலாற்றில் அழிக்க முடியாத பதிவாகி விட்டது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் மகா சங்கத்தினரின் செல்வாக்குக்கும் ஆட்சிகாள்ளலுக்கும் ஆளாகி அவர்கள் சொல்வதையே செய்பவர்களாக மாறி இருந்தனர்.

ஆனால் இப்போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என்றே சொல்லலாம். சமாதானத் தீர்வுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் பௌத்த பிக்குமாரை சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சொல்லும் துணிச்சல் பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்கவுக்கு வந்துள்ளது.

அவருக்கு வந்துள்ள துணிச்சல், இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்களுக்கும், குறிப்பாக ஆட்சித் தலைவர்களுக்கும் வருமாயின் போரை முடிவுக்கு கொண்டு வரவும் இயலும்; இனப் பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் காணவும் இயலும். சிங்கள அரசியல் தலைவர்களிடம் மேற்கூறிய துணிச்சல் விளைபட்டும்!

## இரவுவேளை அல்வாய்ப் பகுதியில் துணிகரம்:

# வர்த்தகரின் மோ.சைக்கிள் முகமூடி நபர்களால் அபகரிப்பு

## 3 சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

வடமராட்சி,மே24

மோட்டார் சைக்கிள் ஒன்றை இரவு நேரம் வழிப்பறி செய்த மூவர் பருத்தித்துறை நீதிவான் ஏ.ஈ.ஏகநாதன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அல்வாயைச் சேர்ந்த வர்த்தகரான மகேஸ்வரன் என்பவர் தனது கடையைப் பூட்டிவிட்டு சக்கோட்டை வழியாகக் கடந்த ஞாயிறு இரவு வீடு திரும்பி[illegible]போது முகமூடி அ[illegible] தெரியாத சிலர் அவரை வழிமறித்துப் பயமுறுத்தி சுமார் 62 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை வழிப்பறி செய்து கொண்டு தலைமறைவானார்கள்.

இச்சம்பவம் குறித்து பிரஸ்தாப வர்த்தகர் பருத்தித்துறை பொலிஸிலும், வல்லை இராணுவ முகாமிலும் புகார் செய்திருந்தார்.

மறுநாள் திங்கட்கிழமை காலை மோட்டார் சைக்கிளுடன் வந்த இருவர் வல்லையில் வீதிச் சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். அல்வாய் வடக்கைச் சேர்ந்த செல்வராசா பாஸ்கரன் (20 வயது) நற்குணராசா ஜங்கரன் (16 வயது) ஆகிய அந்த இரு சந்தேக நபர்களும் பின்னர் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

சந்தேக நபர்களை விசாரணை செய்த பொலிஸார் இருவரையும் நீதிமன்றத்துல் ஆஜர் செய்ய அழைத்துச் சென்ற போது, பிறிதொரு வழக்குக்காக நீதிமன்றத்துக்கு வந்திருந்த மூன்றாவது சந்தேக நபரான அல்வாய் வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் மதியரசன் (20 வயது) என்பவரும் அங்கு வைத்து கைது செய்யப்பட்டார்.

மூன்று சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

(க-173-109)

## இராணுவத்தினருடன் இணைந்து

# சந்திவெளியில் தமிழ்க்குழு பொதுமக்கள் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,மே24

மட்டக்களப்பு, சந்திவெளி புதுப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சமயம் நள்ளிரவு கிராமத்துக்குள் புகுந்த குழு ஒன்று பொதுமக்களை கடுமையாகத் தாக்கி, அவர்களின் பெறுமதியான பொருள்களைச் சூறையாடியதாகவும், பெண்களை வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

மொறக்கொட்டாஞ்சேனை முகாம் படையினரும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் தமிழ்க்குழு ஒன்றுமே இந்தச் சம்பவங்களுக்குக் காரணம் என்று அப்பகுதிப் பொதுமக்களை மேற்கோள் காட்டி அந்தச் செய்தி ஏஜென்ஸி தகவல் வெளியிட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் வீரபத்திரன் செல்வராஜா, கனகரத்தினம் லீலாதேவி, திருப்பதி பாஸ்கரன், கணபதிப்பிள்ளை கோபால், தியவீரசிங்கம் வீரக்குட்டை, ஏகாம்பரம் நகுலேஸ்வரன் ஆகிய ஆறுபேரும் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல்கள் தொடர்பாக சந்திவெளியில் அமைந்துள்ள இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஒருவரிடம் பொதுமக்கள் முறையிட்டதாகவும் -

அவர் தமக்கும் இச்சம்பவங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று கூறி மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் முறையிடுமாறு தெரிவித்ததாகவும் - கூறப்பட்டது.

(உ-க-6)

## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.பல்கலைக் கழக புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் 'வன்முறை எதிர் வன்முறைக் கலாசாரமும் பெண்ணியமும்' என்ற தலைப்பின் கீழ் கார்லோஸ் ஸோரா (Carlos Saura) இயக்கிய 'அவுட் ரேஜ்' (Out Rage) என்னும் திரைப்படம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. (ஐ)

## சிப்பாய் தற்கொலை முயற்சி

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் மாலை ரி-56 ரகத் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

கழுத்தில் ரவை பாய்ந்த நிலையில் இவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (ஐ)

### நாளை

வைகாசி 11
வெள்ளிக்கிழமை
த்சி:துதியை
காலை 6.22 வரை
திருதியை
பின்னிரவு 4.28 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முற்பகல் 10.53 வரை.
சுபநேரம் : 5.57 - 7.22
ராகுகாலம் : 10.22 - 11.52
(பழைய நேரப்படி)

## நாட்டு நடப்பு

பட்டினத்தில் என்னடி பதற்றம்
பாரடி வாகனங்கள் நூறு
ஒட்ட ஒட்ட ஒவ்வொன்றாய் நகர
ஒரு மணித்தியாலமாகுதடி ஏன்ரி?
கூட்டம் கொஞ்சலியோ பாரன்
குண்டுகிண்டு வெடித்ததோ கேளன்
கிட்டாங்கி பெற்றோல் செட்டில்
கியூவில் கொடுக்கினமாம் பெற்றோல்!

*-விகடகவி மு.திருநாவுக்கரசு.*

## சாயி சிந்தனை



### குறுகிய மனப்பான்மை மாறவேண்டும்

தெய்வத்தால் ஆகாத காரியம் இந்த உலகில் எதுவும் கிடையாது. தெய்வத்தால் எதையும் செய்ய முடியும். அந்தப் பிரேமை தத்துவத்தை ஈர்க்கும் வகையில் உள்ளுணர்வுகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அப்படி ஈர்ப்பு சக்தியை உருவாக்கிக்கொள்ள சிறிது புனிதத் தன்மை தேவை.

அதோ காந்தம் இருக்கிறது. இதோ இரும்புத்துண்டு இருக்கிறது. காந்தம் இந்த இரும்பை இழுக்கவில்லை. காரணம் என்ன? அப்படி இழுக்க காந்தத்துக்கு சக்தி இல்லையென அர்த்தமில்லை, காந்தத்துக்கு சக்தியுண்டு. இரும்பில்தான் எத்தனை துருவும், குப்பையும்? இவற்றை நீக்கினால் காந்தம் இரும்பைக் கவர்ந்திழுக்கும்.

அதேபோல் தெய்வம் எல்லா இடத்திலும் இருக்கிறது. உன் புத்தியில்தான் எத்தனை அழுக்கு, தூசு? இதை நீ விலக்கி சுத்தம்செய் தெய்வத்துவம் உன்னை நிச்சயம் இழுக்கும். இந்தக் குறை உன்னிடம்தானே தவிர, கடவுளிடம் இல்லை. அதனால் உன் உள்ளுணர்வுகளை மாற்றிக்கொள்.

எப்படி மாற்ற வேண்டும் எல்லாம் தெய்வமே என்ற அளவில் மாற்ற வேண்டும்.

நல்ல மனம் வேண்டும். அது வெற்றியைக்கொண்டு சேர்க்கும் வெற்றி தான் மற்றொரு வெற்றியைத் தொடர்ந்துவரும் Success Begets Success இந்த நல்ல உள்ளுணர்வுகள் நமக்கு வரவேண்டும். நல்ல உணர்வுகள், மங்களகரமானவை நம்முள் வளரவேண்டும், நம் நடத்தை புனிதமானதாக இருக்க வேண்டும். நல்ல பாவங்கள் நம்முள் எழவேண்டும். குறுகிய மனப்பான்மை மாற வேண்டும். தியாகம் என்ற நினைவே தற்போது மனிதனிடம் காணப்படுவதில்லை.

*(சனாதன சாரதி 1995 ஏப்ரல்)*



யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராசாவின் பொன்விழா நிகழ்வின்போது மகாவித்துவான் க.வீரமணிஐயர் விழா நாயகருக்கும் அவரது துணைவியாருக்கும் வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

விழாவில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரை வழங்குவதை அடுத்துள்ள படத்தில் காணலாம். தேவா பொன்விழாச் சபையின் தலைவர் அ.பஞ்சலிங்கமும் அருகில் காணப்படுகின்றார். (ம)

## 'ஞானச் சுடர்' வெளியீட்டு விழா

வடமராட்சி,மே24

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆத்மீக சஞ்சிகையான 'ஞானச் சுடர்' வைகாசி மாத இதழ் வெளியீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பேரவைத் தலைவர் இநாகலிங்கம் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை பொலிகண்டி கந்தவனப்பதி பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.வைத்தியநாதக் குருக்களும், மதிப்புரையை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் தி.சோமாஸ்கந்தராஜக் குருக்களும் நிகழ்த்துவார்கள்.

(க-173)

### உதயவாக்கு

ஒரு முட்டாள் கடலில் கல்லை எறிந்தால் நூறு அறிவாளிகள் ஒன்று சேர்ந்தாலும் அதை வெளியே எடுக்க முடியாது.



# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

24.05.2001

HAPPY BIRTHDAY



## செல்வி ந.கிருத்திகா

அளவெட்டியைச் சேர்ந்த
திரு.திருமதி நந்தகுமாரன் - மாலதி தம்பதிகளின்
செல்வப் புதல்வி கிருத்திகா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (24-05-2001) வியாழக் கிழமை கந்தர்மடத்திலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையா கக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா ரஜீவன், அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பூட்டம்மாமார், பெரியப்பாமார், தேனுகா அத்தை, உமாச்சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் சீரும் சிறப்பும் பெற்று, பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

*க.நந்தகுமாரன்,*
*115/01, அரசடி றோட்,*
*கந்தர்மடம்.*

ரட்ணாஸ்
வைண்டிங் அன் மோட்டோஸ்
*219, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(88041)

# நீங்கா நினைவில் இரண்டாம் ஆண்டு

மண்ணில் 27 - 01 - 1927



விண்ணில் 24 - 05 - 1999

திருமதி
## செபஸ்தியாம்பிள்ளை மேரி திரேசம்மா

ஆண்டுகள் இரண்டு ஆகியதோ
ஆறவில்லை எம்துயரம்!
எம் இனிய அம்மாவின்
எல்லையில்லா அன்பினில்
என்றும் கசிந்துருகிடும்
ஏழைகள் எம்மவர்க்காய்
என்றென்றும் இறைவனிடம்
எமக்காகப் பரிந்துரையும்.

*சில்லாலை.* (88115) செ.அன்ரனிநாயகம்

# சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மகோற்சவ நினைவாக

27-05-2001 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றதினம்
04-06-2001 திங்கட்கிழமை தேர் உற்சவ தினம்
05-06-2001 செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவம்

சரசாலை வாழ்மக்கள் இடம்பெயர்ந்து ஒரு வருடம் கடந்தாலும் கிராமத்தின் காத்தற் கடவுளாக விளங்கி அருள்பாலித்த சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகரை திருவிழா பத்து நாளும் நினைத்து தாம் வசிக்கும் இடங்களில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு, பிரார்த்தனை செய்தும் முன்விரதம் அனுட்டித்தவர்கள் விரதம் அனுட்டிப்பதும் நல்லதாகும்.

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர்
ஆலய பரிபாலன சபையின் சார்பில்
தலைவர் க.சிவசங்கரநாதன்

(C/16801)

## லஞ்சம் பெற்ற பொலீஸ் அதிகாரி சிக்கினார்!

கொழும்பு,மே24

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிற்ற பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி லஞ்சக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீது உத்தரவுப் பத்திரம் இல்லாமல் வேகமாக வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சாரதி ஒருவரிடம் லஞ்சம் பெற்றுக்கொண்டு அவரை விடுவித்தமைக்காக அவரை லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு கைது செய்துள்ளது.

பிரஸ்தாப பொலீஸ் அதிகாரி தம்மிடம் இருநூறு ரூபாவை லஞ்சமாகப் பெற்றார் என குறிப்பிட்ட சாரதி, லஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

கைது செய்யப்பட்ட பொலீஸ் அதிகாரி அவிசாவளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். (க-3-9)

## பேசாலை முகாமில் கைதான 11 பேரும் பிணையில் விடுவிப்பு

மன்னார்,மே24

பேசாலை அகதி முகாமில் வைத்து கடந்த 19ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட 11 இளைஞர்களும் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்தார்.

அடுத்தமாதம் 28ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிவான், 9பேரை சரீரப்பிணையிலும் இருவரை 15ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல அனுமதியளித்தார்.

இதேவேளை -

மன்னார், பேசாலை அகதிமுகாம் இரண்டாவது தடவையாக கடந்த திங்களன்று விசேட அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதலின் போது 13 இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-6)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கொழும்பு,மே24

நீர்கொழும்பு சிறைச்சாலையில் உண்ணா நோன்பிருந்த வெளிநாட்டுக் கை..கள் தமது போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர்.

தங்களது கோரிக்கை தொடர்பாக போதுமான பிரசாரம் கிடைத்துள்ளதை அடுத்தே தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டதாக அந்தக் கைதிகள் தெரிவித்தனர்.

உண்ணாநோன்பிருந்த 6 சீனக் கைதிகளின் உடல்நிலை மோசமடைந்திருந்ததை அடுத்து அவர்கள் மஹர சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளனர். (க-6)

## தென்மராட்சியில் மீளக்குடியமர்வு

யாழ்ப்பாணம்,மே24

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அடுத்து மாதம் முதல் மீளக்குடியமர்த்தப்படவிருக்கின்றனர்.

ஜனாதிபதிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது இது தொடர்பான இணக்கம் ஏற்பட்டதாக ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.(க-3)

## பதினைந்து கட்டுத்துவக்குகள் பொலீஸாரால் மீட்பு

இரத்தினபுரி,மே24

இரத்தினபுரி காட்டுப்பகுதியில மறைத்து வைக்கப்பட்டிருந்த 15 கட்டுததுவக்குகளை இரத்தினபுரி பொலீஸார் மீட்டுள்ளனர்.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்குகள குறிப்பிட்ட காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே தாம் அவற்றைக் கைப்பற்றியதாக பொலீஸார் தெரிவித்தனர்.(க-6)

## மட்டுநகர் வர்த்தகர் கைது

மட்டக்களப்பு,மே24

விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் மட்டக்களப்பு நகர வர்த்தகர் ஒருவர் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்களன்று கைது செய்யப்பட்ட சண்முகம் சண்முகதாசன் என்ற இந்த வர்த்தகர் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார்.(க-6)

# மூன்றாம் ஆண்டு நீங்கா நினைவுகள்

தோற்றம் 17 - 05 - 1931



மறைவு 27 - 05 - 1998

## அமரர் வைத்திலிங்கம் கனகரெட்ணம்

(யாழ்.மாநகர சபை முன்னாள் சாரதி)

ஓராண்டு நினைவில் ஓயாது ஓலமிட்டு
ஈராண்டு நினைவில் இடம் பெயர்ந்து
மூன்றாண்டு நினைவில் மாறாத வடுவாகி
மனமுருகி வாடுகின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற.
" ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*15/5 புகையிரத வீதி,*
*கச்சேரி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (88006)

மனைவி: மோட்சலெட்சுமி,
மகன்: சதீஸ்(Finland),
மகள்: கமலினி(யா/க/ம/ம/வி).

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13 - 04 - 1984



உதிர்வு 04 - 06 - 2000

## சிவசுப்பிரமணியம் நந்தகுமார் (நந்தன்)

திதி:- 24.05.2001

நீ மறைந்தாலும் எங்கள் நெஞ்சங்களில்
நினைவு இருக்கும் வரை உன்முகம் மறையவே மறையாது!
நந்தா உடலால் நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்தால் பிரியவில்லை,
இப் பூமியில் நாம் இருக்கும் வரை உன் நினைவு
எங்களை விட்டு நீங்காது நிலைத்திருக்கும்.

*நந்தா உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.*

த.முகவரி:
*நாகபூசணி அம்மன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (88079)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
துர்க்காபுரம், தெல்லிப்பழை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 - 04 - 1917



இறப்பு 24 - 05 - 2000

## ஆறுமுகம் டானியேல் நாகலிங்கம்

"நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன் என்னை
விசுவாசிக்கிறவன் மரித்தாலும்
பிழைப்பான்"

உம் நினைவென்றும்
எம்மனதில் நிலைத்திருக்கும்:
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

*வட்டுக்கோட்டை*

(88075)

# யாழ்.நகரின் ஒதுக்குப் புறங்களில் குப்பைகள், கழிவுகள் தேக்கம்

இடைவிடாத குண்டுத் தாக்குதல்களினால் யாழ்.மாநகரின் வனப்பு மிக்கப் பெரும் பிரதேசம் அழிவுண்டு போய்க் கிடப்பது பழைய கதை.

நகரின் இருதயப் பகுதியாக ஒரு காலத்தில் விளங்கிய இந்த இடங்கள் அழிந்து குட்டிச் சுவராகிக் கிடக்கின்றது.

ராத மேற்குப் பக்கங்களைச் சுற்றிப் பார்த்த போது ஆங்காங்கே கழிவு நீர் தேங்கிய இடங்களையும், மலை போல் குவிக்கப்பட்ட குப்பைகளை



நகரில் கஸ்தூரியார் வீதியை அண்டி உள்ள வண்ணாங்குளம் நகர வர்த்தகர்களாலும் மாநகர சபை ஊழியர்களாலும் கொட்டப்படும் கழிவுகள் அங்கு குவிந்து கிடப்பதைப் படத்தில் காணலாம். இவற்றில் பெரும்பாலான கழிவுகள் ஆபத்தான பொலித்தீன் வகைகள்.

குண்டுகளுக்கு இரையாகாத அற்ப சொற்ப கட்டடங்களுடன் எஞ்சியுள்ள சிறிய பிரதேசத்திலேயே இப்போது நகரம் படு பிஸியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலும் கணிசமான இடங்கள் இராணுவத் தளங்களாக இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தபடும் வலயங்களாக உள்ளன. முட்கம்பி வேலியிட்ட அந்தப் பகுதிகளுக்குள் பொதுமக்கள் எவரும் செல்லமுடியாது. யாழ்.மருந்துவமனைக்குப் பின்புறமாக உள்ள பெரிய உல்லாச விடுதிகள் மற்றும் வணிக வளாகங்கள் இப்போது இராணுவத்தின் வசமிருக்கின்றன.

லட்சக் கணக்கானோர் வாழ்ந்து வந்த நகரில் இப்போதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை இன்னமும் ஆயிரக்கணக்கில்தான் இருக்கிறது.

நகரின் மத்திய பகுதியாக விளங்கும் யாழ்.ஆஸ்பத்திரி மற்றும் அதனை அண்டிய பகுதிகள் மட்டும்தான் இப்போது நகரமாகக் காட்சி தருகிறது. ஆனால் அதற்கு அப்பால் யாழ். கோட்டை, பண்ணை, முற்றவெளியை அண்டிய நகரின் பெரும் பிரதேசம் இன்னமும் வெறிச்சோடியே கிடக்கிறது.

அழிவுண்ட பல கட்டடங்களின் இடிபாடுகளை புல், பூண்டுகளும் பற்றைகளும் மூடி மறைத்து விட்டாலும்

இந்த இடங்களில் இப்போது தேங்கி வரும் கழிவுகள், குப்பைகளால் நகர மக்களுக்குச் சுகாதார ரீதியில் பெரும் அச்சுறுத்தல் எதிர்



கோட்டை முனீஸ்வரன் வீதியின் ஓரத்தில் குவிக்கப்பட்டுள்ள குப்பைமேடு. பொலீத்தின் பைகளுக்குள் ஆடுகள் இரைதேடுகின்ற காட்சி.

நோக்கப்படுகிறது.

நகரில் மக்கள் அதிகம் குடியம

யுமே காணமுடிகிறது.

நகருக்கு அழகையும் வனப்பையும் தருகின்ற குளங்கள் சில குப்பைக கழிவுகள் கொட்டப்படும் இடங்களாக மாறிவிட்டன. நகரின் ஒதுக்குப் புறங்களிலும் குளக்கரைகளிலும் கொட்டப்படும கழிவுகள் பின்னர் அங்கிருந்து காக்கை வெளிப்பகுதிக்கு அகற்றப்படும் என்று மாநகர சபை

**வதனன்**

அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் நகரப்பகுதியில் குப்பைகள் நீண்ட காலம் தேங்கிக் கிடப்பதால் சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்படுகிறது. குப்பை கொட்டப்படும் இடங்களில் அவற்றுடன் உள்ள கழிவுகளை நாய்களும், காகங்களும் நகரப்பகுதி எங்கும் எடுத்துச் செல்கின்றன. இவ்விடங்களில் இருந்து நுளம்புகளும் பெருகுகின்றன.

நகருக்கு மேற்கே மண்டைதீவுப் பகுதியில் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் இனங்காணப் பட்டிருக்கின்றன. இடிபாடுகள் அகற்றப்பட்டு வடிகால்கள் சீரமைக்கப் படாவிடில் இனிவரும் காலங்களில் ஆபத்தான நோய்களைப் பரப்பக் கூடிய நுளம்புகள் நகரில் பெருகி விட வாய்ப்புண்டு.

தற்போது சுகாதார வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. யாழ்.நகரின் சுகாதார நிலை குறித்து நகர வாசிகளும், மாநகரசபை நிர்வாகத்தினரும் கரிசனைகொள்ள வேண்டிய தருணம் இது.

நகரைத் தூய்மைப்படுத்தும் பாரிய வேலைத்திட்டம் ஒன்று உடனடித் தேவையாகவுள்ளது.

மக்கள் பெரிதும் வசிக்காத இடங்கள் தானே என்று கூறி நகரின் ஒதுக்குப்புறங்களில் கழிவுகளை இனியும் தேங்கவிடுவது ஆபத்தானது.

☆



நகரின் மத்தியில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் ஒன்றின் காட்சி. கட்டட இடிபாடுகள், பற்றைகள், குப்பை கூழங்களுக்கு மத்தியில் நீர் தேங்கி நிற்கிறது.

முகமாலைப் பகுதியில் திங்களன்று

## புலிகளின் மூன்று பதுங்குகுழிகள் அழிக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு,மே24

முகமாலைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் மூன்று பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நான்கு பதுங்கு குழிகளை அழிக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது என்றும் -

இந்த நடவடிக்கையின் போது இடம்பெற்ற சண்டையில் நான்கு படையினர் காயம் அடைந்தனர் என்றும் -

விடுதலைப் புலிகளின் பத்து உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் - தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(க-3)


## மோட்சதீபக் கிரியை அழைப்பு

மலர்வு 01 - 11 - 1939



உதிர்வு 10 - 05 - 2001

**அமரர் சாந்தலிங்கம் சர்வானந்தம்**

(உரும்பிராய் மேற்கு)

அன்னாரின் மோட்ச தீபக் கிரியைகள் இன்று (24.05.2001) வியாழக்கிழமை இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோயிலடியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளிலும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

ச.மதன்,
*வீடியோ படப்பிடிப்பாளர்.*
**(EXPO)**

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(88120)

## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

பளைப் பிரதேச மாணவர்களின் நலன் கருதி பச்சிலைப்பள்ளி



பிரதேச இடம் பெயர்ந்தோர் நலனோம்பு சங்கப் பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்க எமது பாடசாலைகள் உட்பட நான்கு பாடசாலைகளுக்கு பத்து லட்சம் ரூபாவினை வழங்கிய -

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி அலுவல்கள் விவகார இந்துசமய கலாசார அமைச்சர்

**மாண்புமிகு**

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கும் இந்த நிதியினை உரிய முறையில் பயன்படுத்தி நான்கு வகுப்பறைத் தொகுதிகளை அமைக்க உதவிய தென்மராட்சி பிரதேச அமைப்பாளர்

**தோழர் சாள்ஸ் (சூ.அலெக்ஸாண்டர்)**

அவர்களுக்கும் பிரதேச மாணவர்களின் கல்வி நலனை ஆரம்ப செயற்பாடாக முன்னெடுத்து மாண்புமிகு அமைச்சருடன் கலந்துரையாடி நிதியினை ஒதுக்கீடு செய்வதற்கு உதவிய பச்சிலைப்பள்ளி பிரதேச இடம் பெயர்ந்தோர் நலனோம்பு சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும்



மாண்புமிகு அமைச்சரால் வழங்கப்பட்ட நிதியினை பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகளுக்கும் பகிர்ந்தளித்து வகுப்பறைகளைத் திறம்பட அமைக்க உதவிய தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு.வ.செல்வராசா**

அவர்களுக்கும் பளைக் கோட்டக்கல்வி அலுவலர்

**உயர்திரு.அ.கயிலாயபிள்ளை**

அவர்களுக்கும் நான்கு வகுப்பறைத் தொகுதிகளை அமைப்பதற்கான காணிகளை வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

*அதிபர்கள், ஆசிரியர்கள்,*
*பாடசாலை அபிவிருத்திச் சபை,*
*பழைய மாணவர் சங்கம்.*
**பளை மத்திய கல்லூரி.**
(C/16809) **வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை.**



கந்தர்மடம் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அப்பகுதியில் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு தலா 1,000 ரூபா பெறுமதியான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலர் எஸ்.இராஜேஸ்வரன் சிறுவன் ஒருவனுக்கு உடுபுடைவைகள் வழங்குவதை முதலாவது படத்திலும் -
கலாபூஷணம் அராலியூர் நா.செல்லத்துரை பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
இவர்களுடன் நிகழ்வின் தலைவர் க.சிவராமலிங்கம்பிள்ளையும் படத்தில் காணப்படுகிறார். (ஐ)


## நெஞ்சை விட்டு நீங்காத ஓராண்டு நினைவலைகள்



அமரர்
**கந்தசாமி சிவபாலன்**
(ஆசிரியர் - பளை மகா வித்தியாலயம்)

கல்லூரியே கண்ணீரில் மூழ்க
கண்ணீரே கடலாக மாற எங்கள்
ஆசானை எங்கே வைத்தாய்?
காலனே! சொல்? சொல்?? சொல்???
ஆத்மா சாந்தியடைக!!!

தாயின் மடியில் 18 . 12 . 1969
இறைவன் அடியில் 24 . 05 . 2000

உயர்தர மாணவர்கள்,
பளை மகா வித்தியாலயம்.
(88144)


## காரைநகர் பஸ் தடுத்து வைப்பு; சேவை பாதிப்பு

காரைநகர்,மே24

வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் டிப்போக்குச் சொந்தமான பஸ் ஒன்று மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், காரைநகர் - யாழ்ப்பாணம் பஸ் சேவை தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

காரைநகர் - யாழ்ப்பாணத்துக்கு தினசரி நான்கு தடவைகள் சேவையில் ஈடுபடும் இந்த பஸ் கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை மூளாய் வீதியில் விபத்துக்குள்ளாகியது. அதையடுத்து அந்த பஸ் மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இதனால் காரைநகர் - யாழ்ப்பாணத்துக்கான சேவைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் பொதுமக்களும் அரச உத்தியோகத்தர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

(க-72)

## முகத்துவாரத்தில் தீவிர தேடுதல்

கொழும்பு,மே24

கொழும்பு - முகத்துவாரம் பகுதி கடந்த திங்களன்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தீவிரத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அளுத்மாவத்தை வீதி உட்பட குறிப்பிட்ட சில பகுதிகளிலுள்ள வீடுகள் மற்றும் கடைகள், விடுதிகள் என்பன திடீர் சோதனையிடப்பட்டன. தமிழ் மக்கள் படையினரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் போது வட பகுதியைச் சேர்ந்த 25 இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(க-6)

## தொழில்நுட்ப புதுமுக மாணவர் இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரி புதுமுக மாணவர்களை வரவேற்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். தொழில நுட்பக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற தொழில் நுட்பக் கல்லூரி வலயப் பணிப்பாளர் க.ஜெயரத்தினமும், கௌரவ விருந்தினராக உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர் ரீ.இராஜரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் எஸ்.செந்தில்நாதன், உபஅதிபர் எம்.அலோசியஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(க-6)

## தொழில்நுட்ப மாணவர் பெறுபேறு வெளியானது

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டட நிர்மாண தொழில்நுட்பவியல் பயிற்சி நெறிக்கு தோற்றிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய 23 மாணவர்களில் 21 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் ரி.பாலதாஸ், எஸ்.திலீபன், எஸ்.முருகதாஸ், எச்.சேந்தன் ஆகிய 4 பேரும் சிறப்புச் சித்தியடைந்துள்ளனர். (க-6)


## எமை விட்டுச்சென்று இன்றுடன் ஈராண்டுகள்



தாயவள் மகிழ்ந்திட 11 . 01 . 1981
தரணியில் நாம் கதறிட 24 . 05 . 1999

**இராஜகோபால் கங்கேசன் (கங்கு)**
(கொக்குவில் இந்துக் கல்லூரி, 99 A/L வர்த்தகப் பிரிவு மாணவன்)

காலச்சக்கரத்தில் கரைந்த எம் கங்கு - நீ
வளர்மதியாள் மடியினில் ஒரு பூச்செண்டு
மலர்ந்து மனம் பரப்பிய பூங்கொத்து - உனை
எம்மிடமிருந்து பிரித்தானே காலனெனும் நண்டு
நிகழ்வுகள் வருகையில் நித்தம் உன் நினைவு - தினம்
ஆறுதலடைகிறோம் எம்மருகில் நீ உள்ளாய் என்று.

வளர்மதி முன்னேற்றக்கழகமும்,
சனசமூக நிலையமும்.
*செம்பியன் லேன்,*
*கொக்குவில்.*
- உன் வளர்மதி நண்பர்கள்.
(C/16821)



## இனிய நல்வாழ்த்துக்கள்



பேராதனைப் பல்கலைக்கழகத்தின்
கல்வியற்றுறையில்
கலாநிதிப் பட்டம் பெற்ற
எமது கழக உறுப்பினர்
லயன்
**கலாநிதி இராமநாதன் சாந்தன்**
(B.A.(Hons), B.Ed.M.PHILL(CEY.)

அவர்கள் மேலும் பல சிறப்புகள் பெற்றுப் பிரகாசிக்க நாம் உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
அங்கத்தவர்கள்,
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்.
(88141)



## கண்ணீர் அஞ்சலி

சண்டிலிப்பாய் அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நீண்ட பல வருடங்களாக பொருளாளராகப் பணியாற்றி, அம்பாளின் அருட் கடாட்சத்தின் துணையுடன் ஆலயத்தில் பல திருப்பணி வேலைகளை இதய சுத்தியுடன் நிறைவு செய்து, பண்புடனும் மாண்புடனும் வாழ்ந்து சென்ற



அமரர்
**வைரமுத்து செல்லத்துரை**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆறாத் துயரம் அடைந்துள்ளோம் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அம்பாளின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்குவதுடன் அவர் தம் குடும்பத்தவர் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

*சீரணி,*
*சண்டிலிப்பாய்.* (88142) ஆலய தருமகர்த்தா சபையினர்.



## பாராட்டி வாழ்த்துகிறோம்



வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர்
மாண்புமிகு கௌரவ
**டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுடன் பாஷையூர் பொது அமைப்பினர் ஒன்று கூடி கலந்துரையாடியதில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருத்த வேலைக்கும் விளையாட்டு மைதான புனரமைப்புக்கும் கடற்றொழில் உபகரணத் தேவைகளுக்குமாக நிதி ஒதுக்கித் தந்தமைக்காக கௌரவ அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

பாஷையூர் பொது அமைப்பினரும்,
பாஷையூர் பொதுமக்களும்.
(88137)



## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய ஆசிரியரான
**மரியாம்பிள்ளை விக்ரர்**
(யாழ்.ஜெயம்)



அவர்கள் 22.05.2001 அன்று இறைபதமடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

(88129) - ஆசிரிய நண்பர்கள்.



## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி பரஞ்சோதி (வவா)

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பரஞ்சோதி நேற்று (23.05.2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சண்முகம் பரஞ்சோதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மகளும், திருமதி நாககாந்தி சுந்தரமூர்த்தி, அம்பிகைபாகன் (ராசன்), மகேஸபாதன் (ஜேர்மனி), திருமதி நந்தகுமாரி சிவலிங்கம் (கனடா), திருமதி துஷ்பாதேவி சத்தியாபரன் (ஜேர்மனி), கார்த்திகாதேவி கிருபானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியமூர்த்தி (C.T.B. கோண்டாவில்), மாலினி, தரணியா (ஜேர்மனி), சிவலிங்கம் (கனடா), சத்தியாபரன் (ஜேர்மனி), கிருபானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், துஷிதா, துஷானி, சுலோபன், கஜன், நளிநாசினி, ஐங்கரன், அபிராமி, மாதுஸன், கபிலன், கலைப்பிரியா, செந்தூர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மகேந்திரம், ஜெகநாதன் (வவுனியா), காலஞ்சென்ற தில்லையம்பலம், கனேசல்வரன் (கைதடி), திருமதி மின்னல்கிளி சேனாதிராஜா (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2001) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, கட்டை ஆலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழநி கோயிலடி,*
*இருபாலை வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*

தகவல்:
**ச.பரஞ்சோதி (கணவர்)**
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)
(88145)

# 18 இலங்கைத் தமிழரை பிரிட்டன் நாடு கடத்தும்!

லண்டன், மே 24

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி அது மறுக்கப்பட்ட நிலையில் 18 இலங்கைத் தமிழர்கள் கடந்த 10 ஆம் திகதி பிரிட்டிஷ் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களது புகலிட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பாக இவர்கள் மேன்முறையீடு செய்திருந்த போதிலும் அந்த முறையீடும் விசாரணைக்கெடுக்கப்பட்டு பின்பு நிராகரிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 18 பேரும் விரைவில் நாடுகடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டபோதும் இவர்கள் எப்போது நாடு கடத்தப்படுவார்கள் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

அரசியல் தஞ்சம் கோருவோர் விடயத்தில் பிரிட்டிஷ் அரசு கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் ஜாக் ஸ்ருவோ தெரிவித்ததை அடுத்தே இவ்வாறானவர்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

இதேவேளை—

அடுத்த மாதம் பிரிட்டனில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் புகலிடம் கோருவோர் தொடர்பான விடயமே முக்கிய இடத்தைப் பெறவுள்ளது. (ஐ-10)

## ஆபாசத்திரைப்படம் காட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### மினி சினிமா உரிமையாளர் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 24

பாலியலை மையமாகக் கொண்ட ஆபாசத் திரைப்படங்களைக் காண்பிக்கும் மினி சினிமா உரிமையாளர்கள் மீது, மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ், ப நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற மினி சினிமா உரிமையாளர்களுக்கான கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாநகர சபையின் பிரதி முதல்வர் கந்தையன், புளொட் உறுப்பினர் தவநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) பிரமுகர்களான த. சுபத்திரன், ம. மங்கள நேசன் மற்றும் மினி சினிமா உரிமையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ சங்கத்தினால் வசூலிக்கப்படும் பணம் வசதி குறைந்த மினி சினிமாக்களுக்கு இலகு தவணைக்கடன் அடிப்படையில் வழங்கப்படும்.

★ பாடசாலைகள், வாசிகசாலைகள், கோயில்கள் போன்றவற்றில் கல்வி, விஞ்ஞானம் போன்ற படங்களைக் காண்பிப்பதற்கோ அல்லது பொது வேலைத்திட்டங்களுக்கான நிதி சேகரிப்பதற்கோ மினி சினிமா உபகரணங்களை இலவசமாக வழங்குதல்.

★ எதிர்வரும் போயா தினத்தன்று அனைவரும் கூடி, புதிய நிர்வாகம் ஒன்றைத் தெரிவு செய்வது. (க-4-6)

## ஈ. பி. ஆர். எல். எவ். பெயரில் வர்த்தகரிடம் நிதி வசூல்!

### தொடர்பில்லை என்கிறது பெருமாள் அணி

யாழ்ப்பாணம், மே 24

ஈ. பி. ஆர். எல். எவ்வின் பெயரைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் சிலரால் மேற்கொள்ளப்பட்டு வரும் பண வசூலிப்புக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்று ஈ. பி. ஆர். எல். எவ். வரதர் அணியின் யாழ். பிராந்திய பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உயிர்நீத்த ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர்களின் பெயரைப் பயன்படுத்தி பணம் திரட்டுவதற்காக மன்னார் மாவட்டத்தில் நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிக்கு 'தியாகிகள் தினஞாபகார்த்த விளையாட்டு நிதி' என்று பெயர் சூட்டி மன்னார் மாவட்டத்தில் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டைப் பாவித்து, ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெயரைச் சொல்லி யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்களிடமும், பொதுமக்களிடமும் பணம் வசூலிக்கப்படுகிறது.

ஓர் அமைப்பு பொதுத் தேவைகளுக்காக பொது மக்களிடமிருந்து நிதி சேகரிப்பதில் தவறில்லை. ஆனால் அவ்வாறு நிதிசேகரிப்பில் ஈடுபடுபவர்கள் தாங்கள் யார் என்பதைத் தெளிவாக இனம் காட்டி, நேர்மையாக அத்தகைய உதவியைக் கோரலாம். அதனை விடுத்து தமது சுயலாபங்களுக்காக ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியைஉடைத்ததுமாத்திரமல்ல இன்று குடாநாட்டு மக்களின் அன்றாட, அரசியல் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து முன்னின்று செயற்படாது, எவ்வித அரசியல் முன்னெடுப்புக்களுமின்றி, எவ்வித கட்டுக்கோப்புமின்றி இயங்கும் 4 பேர் அனைத்து ஈ. பி. ஆர்.எல்.எவ் தோழர்களின் பேராலும் நிதி சேகரிப்பில் ஈடுபடுவது கட்சியின் அனுதாபிகளை, ஆதரவாளர்களை மக்களை ஏமாற்றுவதாகும்.

எமது தோழர்கள் என்ன நோக்கத்திற்காகப் போராடி தமது உயிரைத் தியாகம் செய்தார்களோ அந்த நோக்கத்திற்காகத் தொடர்ந்து போராடுவதுதான் அவர்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலி, கௌரவம் ஆகும். அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை முன்னெடுத்துச் செல்ல முடியாதவர்கள், வக்கற்றவர்கள் அந்தத் தியாகிகளை நினைவுகூருகிறோம், கௌரவிக்கிறோம் என்று கூறி அந்தத் தியாகிகளின் பேரைச் சொல்லி நிதி சேகரிப்பில் ஈடுபடுவது மோசடி ஆகும்.

கட்சிக்குள் ஜனநாயகம், கட்சிகளிடையே ஐக்கியம் என்பவற்றை வலியுறுத்தி அதற்காக உண்மையாக உழைத்தவரும், உழைக்கும் மக்களை, அவர்களின் விடுதலையை நேசித்தவரும், ஜனநாயக மறுப்பு, மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கெதிராக உறுதியாகச் செயற்பட்டவருமான தோழர் பத்மநாபாவினதும் அவரின் வழியைப்பின்பற்றி உயிர்நீத்த தியாகிகளினதும் பேரை உச்சரிப்பதற்குக் கூட, அவர்களின் பாதையை கைவிட்ட, அவர்களின் வழியை பின்பற்றி ஈ. பி. ஆர். எல் எவ். கட்சியை வழிநடத்தத் தவறிய எவருக்கும் தகுதியில்லை— என்றும் அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## பாலர் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 24

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் பண்டத்தரிப்பு பட்டின சபை உப அலுவலகத்தின் கீழ் இயங்கும் ஸ்ரீ முருகன் முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த பாலர் விளையாட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரான்பற்று கலைமகள் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பொ. நவரட்ணம் கலந்து கொள்வார். (க-3)

## கணனிப் பிரிவு அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே 24

இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தில் கணனிப்பிரிவு கற்றல், கற்பித்தல் மூலவள நிலையத்தின் அங்குரார்ப்பண வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வி நிறுவன அதிபர் த. வரதராஜா தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரையும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-5)

## மாவட்ட கிரிக்கெட் அணி தெரிவு

யாழ்ப்பாணம், மே 24

இலங்கை துடுப்பாட்டக் கட்டுப்பாட்டுச் சபை 19 வயது அணிகளுக்கு இடையில் அடுத்த மாதம் 8 ஆம், 10 ஆம், 12 ஆம் திகதிகளில் மாவட்டரீதியில் நடத்தும் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றும்யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் அணியைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் நாளை வெள்ளிக்கிழமை முதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவிருக்கின்றது.

யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவிருக்கும் இந்தப் பயிற்சி முகாமுக்கு ஒவ்வொரு பாடசாலையில் இருந்து நான்கு வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

1982 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்குப் பின் பிறந்தவர்கள் இந்த முகாமில் பங்கு பற்ற முடியும்.

இந்த முகாமில் பங்குபற்ற விரும்பும் வீரர்கள் தமது திறமைச் சான்றிதழ், அதிபரின் சிபார்சுக் கடிதம் ஆகியவற்றுடன் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## கந்தரோடையில் 26 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா கடனுதவி

வலிகாமம் தெற்கு, மே 24

கந்தரோடைக் கிராமத்தில் சுயதொழில் வாய்ப்பில் ஈடுபடத் தகுதியுடைய 26 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டத்தின் கீழ் தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் வைத்து இக்கடன் வழங்கப்பட்டது.

கந்தரோடை விவசாயிகள் சம்மேளனத்தின் பொருளாளரும் பாடசாலை அதிபருமான க. செல்வக்குமாரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

சுழற்சி முறைக்கடனின் பயன்பாடுபற்றியும், பெற்ற கடனை மீளச் செலுத்துவதில் பயனாளிகள் காட்டவேண்டிய உறுதி நிலைபாடு பற்றியும் பயனாளிகளுக்கு இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

1999 ஆம் ஆண்டில் முதன்முதலாக வழங்கப்பட்ட 40 லட்சம் ரூபாவில் மீளளிப்புச் செய்யப்பட்ட பணத் தொகையைக் கொண்டே இன்று மேலும் 26 பயனாளிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் க. தேீஸ்வரன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் மற்றும் கந்தரோடை கிராம சேவையாளர் க. திருநாவுக்கரசு, செ. மகாதேவன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-152)

## வலி. வடக்குப் பிரதேச சபை ஊழியர் மாணவர்களை வெயிலில் நிறுத்தி சைக்கிள் 'தகடு' பெற நிர்ப்பந்தம்

### ஊர் மக்கள், பெற்றோர் சீற்றம்

வலி. வடக்கு மே 24

பாடசாலை மாணவர்கள் கொளுத்தும் வெயிலில் நிறுத்தப்பட்டு சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள் பெறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பாடசாலை விட்டு வீடுகளுக்குத் திரும்பிய மாணவர்கள் மல்லாகம் சந்தியில் வலி. வடக்குப் பிரதேச சபை ஊழியர்களால் மறிக்கப்பட்டு இலக்கத்தகடுகள் பெறும்படி பணிக்கப்பட்டனர்.

பணம் இல்லாத மாணவர்கள் மற்றும் பொது மக்களின் சைக்கிள்கள் தடுத்து வைக்கப்பட்டுப் பணத்தை எடுத்துவருமாறு அவர்கள் பணிக்கப்பட்டனர் என்றும்—

வீடுகளுக்கு நடந்து சென்று பணத்தை எடுத்து வந்த பின்னரே சைக்கிள்கள் மீள ஒப்படைக்கப்பட்டன என்றும் கூறப்பட்டது.

மாணவர்கள் மதிய உணவு ஏதுமின்றிப் பட்டினியுடன் மாலை 4 மணிவரை நின்று இலக்கத்தகடுகளைப் பெற்றுச் சென்றனர் என்றும், பிள்ளைகளைக் காணாது பெற்றோர்கள் தேடித் திரிய வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, கடும் நோயாளியை வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்ல ஆட்டோ பிடிக்க வந்த சிறுவனின் சைக்கிள் தடுத்து வைக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

பிரதேச சபை ஊழியர்களின் இத்தகைய நடவடிக்கையால் மாணவர்களின் பெற்றோரும் ஊர் மக்களும் சீற்றமும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். (க-86)

## ரூ.15 லட்சம் செலவில் இவ்வருடம் வலி. தெற்கில் அபிவிருத்திகள்

வலிகாமம் தெற்கு, மே 24

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் இவ்வருடம் சுமார் 15 லட்சம் ரூபா வரையான அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

பிரமாண அடிப்படையிலான அரச நன்கொடை நிதியில் இருந்து, சுமார் ஐந்து லட்சம் ரூபாவும் பிரதேச சபையின் சமுதாய நிதியில் இருந்து சுமார் பத்து லட்சம் ரூபாவும் மேற்படி அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலவிடப்பட உள்ளன.

பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட உள்ள அபிவிருத்தி வேலைகளும் அவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி பற்றிய விவரமும் வருமாறு:-

★ மாருட்டி வீதி கற்கள் போட்டு தாரிடல் ரூபா 1 லட்சத்து 2 ஆயிரம் ரூபா.

★ லவ்லேன் (கட்டு வினை தொடங்கி சிங்கத்தின் கலட்டியூடாக லவ்லேன் நோக்கி) 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ ஏழாலை சேமக்காலை வீதி திருத்தம் 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ சபாபதிப்பிள்ளை வீதி கற்கள் போட்டு தாரிடல் 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

★ சுன்னாகம் ரயில் நிலைய கிழக்கு வீதி கற்கள் போட்டு தாரிடுதல் 5 லட்சத்து 65 ஆயிரம் ரூபா.

★ ஏழாலை உப அலுவலகத்துக்கு சுற்றுமதில் கட்டுதல் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா.

★ ஏழாலை ஆயுர்வேத வைத்தியசாலைக்கான பிரிவிடுதல் வேலை — 80 ஆயிரம் ரூபா.

★ சுன்னாகம் பொது நூலகத்தில் சைக்கிள் தரிப்பிடமும் இணைந்த காவலாளி அறையும் அமைத்தல் 85 ஆயிரம் ரூபா.

★ சுன்னாகம் மத்திய சந்தையில் உள்ள வெற்றிலைக் கொட்டகை அமைத்தல் — 35 ஆயிரம் ரூபா

★ மந்தாலோடை குழாய்க் கிணறு திருத்தம் ரூபா 8 ஆயிரம்.

★ ஏழாலை பொது நூலகத்திற்கு — 17, 437, ரூபா. (க-252)

## கவிதை நூல் வெளியீடு

அச்சுவேலி, மே 24

''ஆண்பாலம்'' கவிதை தொகுப்பு நூல் வெளியீடு புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா தலைமையில் நடைபெறும்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் வே. இளையகுட்டி எழுதிய இந்தக் கவிதைத் தொகுப்பின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகதமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராசாவும் ஆய்வுரையை கவிஞர் சோ. பத்மநாதனும். நிகழ்த்துவர் நூலின் முதற் பிரதியை யாழ் பல்கலைக் கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரத்தினம் பெற்றுக்கொள்வார் (க-11)

# சட்டத்தின் பிடியில் இருந்து சுலபமாக செல்வாக்குள்ளோர் தப்புகின்றனர்

## மட்டக்களப்பு நீதிவான் அப்துல்கபூர் தெரிவிப்பு

மட்டக்களப்பு மே 24

செல்வாக்குப் படைத்தவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து சுலபமாகத் தப்பித்துக் கொள்கிறார்கள்.

—இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் கலாநிதி ஏ. அப்துல்கபூர் தெரிவித்தார்.

கைதிகள் நலன்புரிச் சங்க மட்டக்களப்புக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்கள் பிரித்தானியர்களால் உருவாக்கப்பட்டவை. எமது நாட்டுசமய, கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்டு குற்றவியல் சட்டம் இதுவரை உருவாக்கப்படவில்லை.

இதனால் அரசியல் மற்றும் ஏனைய செல்வாக்குகள் உள்ளவர்கள், சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிடுகிறார்கள். இவ்வாறான செல்வாக்குகள் எதுவும் இல்லாதவர்களே தண்டனைகளைப் பெறுகிறார்கள்.

குற்றச் செயல்கள் தாராளமாக நடைபெறுகின்ற இந்தக் காலத்தில் குற்றவாளிகளில் 4 சதவீதத்தினரே தண்டிக்கப்படுகிறார்கள். ஏனைய 96 வீதத்தினரும், சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி விடுகின்றனர்.

(ஒ-4)

## நேர்முகப்பரீட்சையில்பங்குபற்றியஅநேக தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

அச்சுவேலி, மே 24

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி. மிக விரைவில் நியமனக்கடிதங்கள் வலயக் கல்விப்பணிப்பாளர் ஊடாக வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக நீண்டகாலம் பணியாற்றி இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் வலயக் கல்வி அலுவலகங்களில் அண்மையில் நடைபெற்றன.

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம்பிள்ளை தலைமையில் வலயக் கல்விப்பணிப்பாளர்கள் உள்ளடங்கிய குழு நேர்முகப் பரீட்சைகளை நடத்தி இருந்தது.

நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் இறுதிப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, மாகாணக்கல்வி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தொண்டர் ஆசிரியர் நேர்முகப்பரீட்சைக்கு 750 இற்கு மேற்பட்டவர்கள் தோற்றி இருந்தனர் என்றும் அவர்களில் 350 க்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படலாம் என்றும் அறியப்படுகின்றது.

(க-11)

## தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 24

வடபிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைப்புக்குழு இளைஞர் பிரிவு நடத்தும் தலைமைத்துவப்பயிற்சி எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

(க-173)


# கேள்வி அறிவித்தல்

## வலயக் கல்வித் திணைக்களம் - வலிகாமம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10. 30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொட. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. | யா/ இணுவில் மத்திய கல்லூரி இரண்டு மாடிக் கட்டடம் அமைத்தல் 70'X25' (கீழ்மாடி மட்டும்). | 500/- | 10, 000/- |

01. மேற்படி வேலைகளுக்கு இக்ராட் (ஐசீரிஏடி) நிறுவனத்தின் எம் 09 ம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவு செய்து கொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்.
02. கேள்விப் பத்திரங்களில் பொருள்கள் சேவைகள் வரி (ஜீ.எஸ்.ரி) சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பொருள்கள் சேவைகள் வரி (ஜீ.எஸ்.ரி) சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
03. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப்பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப்பத்திரங்களை 24-05-2001 ஆம் திகதியிலிருந்து 30-05-2001 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வலிகாமம் வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியுடன் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும், கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டுக் கடித உறைகளின் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையில் போட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்தில் உள்ள வலிகாம வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
05. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர், தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும். எதுவித கால தாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. சரியாக நிரப்பப்படாத, பிழைகள் கூடிய, தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை கட்டடப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறியத் தருகின்றோம்.

**வீ. இராசையா**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்.**

மருதனார்மடம்,
சுன்னாகம்,
23-05-2001.

(சி-16824)



# வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலைகளில் பேருந்துச் சாரதிகளுக்கான வெற்றிடங்கள் இருப்பதால் யாழ். மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கீழ்க் காணும் தகைமை உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தகைமைகள்:**
   - அ) கல்வித்தகைமை: ஆகக் குறைந்தது 8 ஆம்வகுப்பு அல்லது 9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருக்க வேண்டும்.
   - ஆ) நிறை: 45 கிலோவுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.
   - இ) உயரம்: 5 அடி 3 அங்குலமும் அதற்கு மேலும்.
   - ஈ) வயது: 23 தொடக்கம் 45 வயது வரை (2001—06—15 ஆம் திகதியன்று).
2. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
3. மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சகல மோட்டார் கோச்சு (All Motor Coaches) வாகனங்கள் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பதுடன், அவ்வாறான கனரக வாகனங்கள் செலுத்துவதில் இரண்டு (02) வருடங்களுக்கு மேலான அனுபவம் இருத்தல் வேண்டும்.
4. வ. பி. போ. சபையின் சாரதிப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெற்றிருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரர்கள் யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். இதை உறுதிப்படுத்தும் பிரதேச செயலரின் மேலொப்பம் இடப்பட்ட கிராம சேவையாளரின் கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
6. நேர்முகப் பரீட்சையின் போது பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம சேவையாளரின் நற்சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
7. **விண்ணப்ப முடிவு திகதி: 2001-06-15**
8. விண்ணப்பங்கள் யாவும் ''ஆளணி முகாமையாளர், வ. பி. போ. சபை, பலாலி வீதி, கோண்டாவில்'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
9. விண்ணப்பப் படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' என்பதனைக் குறிப்பிடவும்.
10. நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் (12''X8'' அளவில்) தயாரித்துப் பூர்த்தி செய்தல் வேண்டும். 2001—06—15 ஆம் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,
வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்.

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

01. முழுப்பெயர்:
02. முதலெழுத்துக்களுடன் பெயர்:
03. தற்போதைய வதிவிட முகவரி:
04. பிறந்த திகதி:
    (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கவும்)
05. 15 - 06 - 2001 இல் வயது:
    வருடம்: மாதம்: நாள்:
06. தேசிய இனம்:
07. உயரம்: அடி: அங்குலம்:
08. நிறை: கிலோ:
09. கல்வித் தகைமை:
    (சான்றிதழின் பிரதி இணைக்கவும்)
10. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்:
    (சாரதி அனுமதிப்பத்திர பிரதி இணைக்கவும்)
11. அனுபவம்:
    (சான்றிதழின் பிரதி இணைக்கவும்)
12. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம்:
13. வேறு விசேட தகைமைகள் இருப்பின் குறிப்பிடுக:
14. கிராம சேவையாளரின் பிரிவு: இல:
    (யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர் என்பதை உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரின் மேலொப்பமிட்ட கிராம சேவையாளரின் கடிதத்தின் பிரதி இணைக்கவும்).

மேற்குறிப்பிட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களில் தவறுகள், பிழைகள் காணப்படுமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் நான் நன்கு அறிவேன். அத்துடன் வ. பி. போ. சபையின் சகல சாலைகளிலும் தேவை ஏற்படும்போது முகாமையால் பணிக்கப்படும் சந்தர்ப்பங்களில் கடமை புரிய இத்தால் சம்மதம் தெரிவிக்கின்றேன்.

............................ ............................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

(சி/16823)

# நன்றியுடன் பாராட்டுகின்றோம்



பளை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர், ஊழியர்களுக்கு வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர்அமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரியில் 20.05.2001ஆம் திகதி நடைபெற்ற மக்கள் குறை நிவிர்த்திச் சேவையின்போது உரிய சம்பளத்தைப் பெற உடனே அங்கீகாரம் வழங்கிய

**வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனர் அமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் விவகார அமைச்சர்**

**மாண்புமிகு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்**

இதற்கு உதவி புரிந்த மேற்படி அமைச்சின் செயலாளர்

**திரு.ப.ரகுநாதன் அவர்களையும்**

நல்லூர் பிரதேச சபைத் தலைவரும்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.[illegible] அமைப்பாளர்

**திரு.க.மணிபல்லவராஜன் அவர்களையும்**

யாழ்மாவட்ட அரசாங்க அதிபர்

**திரு.க.சண்முகநாதன் அவர்களையும்**

பரந்தன் இரசாயனக் கம்பனி லிமிட்டெட் தலைவர்

**திரு.P.தியாகராசா அவர்களையும்**

வடக்கு மீள் குடியமர்வு புனர்நிர்மாண அதிகார சபையின் நிதிப் பணிப்பாளர்

**திரு.S.அன்னலிங்கம் அவர்களையும்**

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர்கள், பாதுகாவலர்கள்,
*மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை - பளை.* (88149)

# மரண அறிவித்தல்கள்

## இறப்பியேல் ஆசீர்வாதம்

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட இறப்பியேல் ஆசீர்வாதம் நேற்று (23-05-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொர்ணம்மாவின் அன்புக் கணவரும் டேவிற், றோஸ்மலர் (பிரான்ஸ்), பிரான்ஸிஸ்(செல்வம் - ஓமான்), றெஜீனா, வின்சன்(பிரான்ஸ்), மேரிஸ்ரெலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராஜதுரை மற்றும் பிரான்சிஸ்கா(கிளி), மரியதாஸ், அனற்கிளாறிஸ் (பிரான்ஸ்), டொன்பொஸ்கோ ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் அருளானந்தம் ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரெலின் (பிரான்ஸ்), பிலிப்ஸ்ரனா(இந்தியா), டெல்பொக்(லண்டன்), கொஸ்ரா, லக்ஸ்மன்ராஜ் (லண்டன்), லதா (ஜேர்மனி), றமேஸ்(பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), சதீஸ்(பிரான்ஸ்), காலஞ்சென்ற சபேஸ் மற்றும் அன்றூஷன், பொபிராஜ், மேரிக்கெலன், கெபின், கொலின், கொட்வின்(பிரான்ஸ்), றொசினி, சுதர்சன், சுகிர்தன் ஆகியோரின் பேரனாரும், ஆகாஸின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(24-05-2001) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ச.டொன்பொஸ்கோ (மருமகன்)

தற்காலிக முகவரி:-
*கல்லூரி வீதி,*
*மானிப்பாய் தெற்கு,*
*மானிப்பாய்.*

(88157)

நிரந்தர முகவரி:-
*119, கொழும்புத்துறை றோட்,*
*கொழும்புத்துறை*

## கனகசபை இராஜேந்திரம்

இராசவீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த கனகசபை இராஜேந்திரம் நேற்று (23-05-2001) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வியாளம்மாவின் அன்புக் கணவரும் விஜயராசா (இ.மி.சபை, வவுனியா), மாணிக்கவாசகர்(வவுனியா), தாமோதரம்பிள்ளை (நீர்வேலி), பூ.கனகமுத்தி (நீர்வேலி), தூபவரத்தினம் (வவுனியா), சின்னராசா, பத்மாதேவி, குணராசா (இ.மி.ச.யாழ்.), சந்நிதி (இ.மி.ச.யாழ்.) காலஞ்சென்ற தசபாரி மற்றும் செல்வராசா (A.C.N. எலக்றிக்கல்கடை, வவுனியா), சிவராசா, மல்லிகாதேவி, குணவதி (வவுனியா), தசபஞ்சாட்சர (சமூக அபிவிருத்தி மன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் பூதத்தம்பி, அமரர் துரைசிங்கம் மற்றும் பாலசிங்கம் ஜெயக்குமார், லோகநாதன் (பி.தே.ச.நீர்வேலி), சிவராசா (வவுனியா), சுகந்தி, சரஸ்வதி, இரத்தினவதி, ஸ்ரீமதி, சியாமளா, சித்திரா, மாலா ஆகியோரின் மாமனாரும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.05.2001) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.செல்வராசா
(செல்வம் -மகன்)

*இராச வீதி,*
*நீர்வேலி தெற்கு, கோப்பாய்.* (88155)

## சின்னத்தம்பி கந்தசாமி

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி அவர்கள் 22.05.2001 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பவளம் மற்றும் இராமலிங்கம் (கைதடி), பொன்னம்மா(கொழும்பு), இளையதம்பி (கனடா) ஆகியோரின் மூத்த சகோதரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம் (ஆதவன் மருந்தகம் - கைதடி), பூபாலசிங்கம்(ஜேர்மனி), குணசிங்கம் (ஜேர்மனி), கமலாட்ணேஸ்வரி(ஜேர்மனி), இராஜசிங்கம்(ஜேர்மனி), துரைசிங்கம்(சுவிஸ்), இரட்ணசிங்கம்(கனடா), சுந்தரலிங்கம்(கனடா), கமலேஸ்வரி(வவுனியா), கமலதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சோதிராசா (ஜேர்மனி), நீலவண்ணன்(லண்டன்), ரேணுகா (நீர்வேலி), உதயஞானதேவி(ஜேர்மனி), மைதிலி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணவன், நிந்துகா, சகுந்தன், குகந்தன், ஸயந்தி, விதுஷா, ஜதுசன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25-05-2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க.தர்மகுலசிங்கம் (மகன்)

*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (88150)


# நாகம்ஸ்
சுன்னாகம்

எம்.ஜி.ஆர். (இருவேடங்கள்)
சரோஜாதேவி, நம்பியார்
நடித்த
**எங்க வீட்டுப் பிள்ளை**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 6.00 (விசேட காட்சி) (88152)

# ராஜா யாழ்ப்பாணம்

சரத்குமார், தேவயாணி
மற்றும் பலர் நடிப்பில் (C/16684)
**பட்டாளி**
காட்சிகள் தினசரி : 10.30, 2.30 (புதியநேரம்)
நாளை முதல்
**உன்னைக்கொடு என்னைத் தருவேன்**
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே)

# லஷ்சுமி
இணுவில்

இன்று மட்டும்
*கார்த்திக்.லைலா.மனோரமா.தாமு*
**ரோஜாவனம்**
(ரீல்ஸ்)
நாளை முதல் **தீனா**
தினசரி 3 காட்சிகள்
10.30, 2.00, 5.00 (புதியநேரம்) (C/16835)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்படி கற்கைநெறிக்குப் பதிவு செய்ய விரும்பும் தகுதிவாய்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**தேவையான தகைமைகள்**

1. பழைய பாடத்திட்டத்தில் ஒரே தடவையில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் 180 புள்ளிகள் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதியுடைய சகல மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். அல்லது புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2000 ஓகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களை எடுத்தோர்,
   - அ) மூன்று அங்கீகரிக்கப்பட்ட பாடங்களிலும் சித்திபெற்று 135ற்குக் குறையாத மொத்தத் திரட்டுப் புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன்,
   - ஆ) பொது சாதாரண வினாத்தாளில் 30% க்குக் குறையாத புள்ளியைப் பெற்றிருக்க வேண்டும்.
2. தேர்வுக்கு - நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.
3. கற்கை நெறிக்குரிய கட்டணம்:-

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | ரூபா | 250.00 |
| கற்கைநெறிக்கட்டணம் | ரூபா | 5000.00 |
| பரீட்சைக் கட்டணம் | ரூபா | 750.00 |
| நூலக வைப்பு (மீளப்பெறக்கூடியது) | ரூபா | 500.00 |
| ஆய்வுகூட வைப்பு (மீளப்பெறக்கூடியது) | ரூபா | 500.00 |
| மொத்தம் | ரூபா | 7000.00 |

கட்டணங்கள் முற்பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
காலம்: ஒரு வருடம்; உள்வாரி - முழுநேரம்

விண்ணப்பப்படிவங்கள் *உதவிப்பதிவாளர்/தேர்வுகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரியில் இருந்து ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்கள், *இணைப்பாளர்/ கடல் வள அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு எதிர்வரும் (20.07.2001) வெள்ளி அன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்பட வேண்டும்.

கற்கைநெறி எதிர்வரும் (2001.09.24) திங்கள் அன்று தொடங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**பதிவாளர்,**
*2001.05.22* (C/16822)

# நல்லூர் பிரதேச சபை

## திருநெல்வேலி நவீன சந்தை மேல்மாடிக் கடைகள்

## கேள்வி அறிவித்தல்

**கடை இலக்கம் : 01, 02, 03, 06, 08, 09,10,11,12,13,14**

நல்லூர் பிரதேச சபையின் திருநெல்வேலி நவீன சந்தை மேல்மாடிக் கடைகள் பதினொன்று (11) 2001ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் வாடகைக்கு விடுவதற்கு கேள்விகள் 11.06.2001ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *'தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி'* என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும் கடையின் இலக்கமும் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல்வேண்டும். இணைப்பிரதியை *'உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'* என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக் கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 04.06.2001ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டை கொண்டுவருதல் வேண்டும். எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் மூன்று நாள்களுக்குள் கீ.மணி, பொருள்கள் சேவைகள் வரி (ஜீ.எஸ்.ரீ) என்பனவற்றின் முழுத் தொகையையும் செலுத்தி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**குறிப்பு:**

1) ஆகக்குறைந்த கேள்வித் தொகைக்குக் கீழ் குறிப்பிடப்படும் கேள்விக்காரரின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
2) ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு கடைக்கு மட்டும் விண்ணப்பிக்க முடியும்.
3) தங்களினால் கோரப்படும் கேள்வித் தொகைக்குப் புறம்பாக தொகையின் 12.5% பொருள்கள் சேவைகள் வரியாக (ஜீ.எஸ்.ரீ) செலுத்தப்படல் வேண்டும். மேற்படித் தொகையும் விண்ணப்பப் படிவத்தில் காட்டப்படல் வேண்டும்.
4) கேள்விப் பத்திரத் தொகையுடன் 12.5% பொருள்கள் சேவைகள் வரி (ஜீ.எஸ்.ரீ) செலுத்தப்படல் வேண்டும்.
5) தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்பே அனுமதி வழங்கப்படும்.

| கடை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக் குறைந்த கீ.மணி (ஜீ.எஸ்.ரீ தவிர்ந்த) |
|---|---|---|---|
| 01 | 500/- | 10,000/- | 210,000.00 |
| 02 | 500/- | 10,000/- | 210,000.00 |
| 03 | 500/- | 10,000/- | 144,000.00 |
| 06 | 500/- | 10,000/- | 144,000.00 |
| 08 | 500/- | 10,000/- | 210,000.00 |
| 09 | 500/- | 10,000/- | 192,000.00 |
| 10 | 500/- | 10,000/- | 192,000.00 |
| 11 | 500/- | 10,000/- | 288,000.00 |
| 12 | 500/- | 10,000/- | 168,000.00 |
| 13 | 500/- | 10,000/- | 168,000.00 |
| 14 | 500/- | 10,000/- | 168,000.00 |

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி
21.05.2001

**க.மணிபல்லவராஜன்** *(ஜே.பி.யு.எம்)*
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை. (C/16837)

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்து சனியன்று பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே24

யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாபபுக் குழு நடத்தும் 'சிறுவர் துஷ்பிரயோகமும் சிறுவர் உரிமைகளும்' தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள 'சாந்திகம்' விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவின் தவிசாளருமான து.வைத்திலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

இப்பயிற்சிப் பட்டறையில் நிகழ்த்தப்படவுள்ள கருத்துரைகளும், கருத்துரை வழங்குவோர் விவரமும் வருமாறு :-

'சிறுவர் உரிமைகள்' -ஜெனொவா அல்பிரட், 'யாழ்ப்பாணத்தில் சிறுவர் துஷ்பிரயோகம்' - டாக்டர் கலா சோமசுந்தரம், 'சிறுவர்களில் பாலியல் துஷபிரயோகம்' - டாக்டர் ஜீபவானி, 'சிறுவர் துஷ்பிரயோகத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களும் சட்ட, வைத்திய பிரச்சினைகளும் - டாக்டர் எஸ்.வி. சிறி இராஜேஸ்வரன், 'சிறுவர் துஷ்பிரயோகங்களில் சட்ட நடவடிக்கைகள்' - யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம் நீதிபதிகள்.

# 'சிஹல உறுமய' கிளை மீது பிரான்ஸ் பொலீஸார் பாய்ச்சல்!

பாரிஸ்,மே24

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் உள்ள 'சிஹல உறுமய' கட்சியின் கிளை அலுவலகத்தில் நேற்று அந்நாட்டுப பொலீஸார் தீவிர தேடுதல வேட்டை நடத்தியதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

கொழும்பிலிருந்தும் ஏனைய நாடுகளில் இருந்தும் கட்சியின் பிரமுகர்களை அழைத்து எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் பெரிய மாநாடு ஒன்றை நடத்த அக்கட்சியின் பிரான்ஸ கிளை நடவடிக்கை எடுத்து வந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த மாநாடு இனவாதத்தைத் தூண்டி, பிரான்ஸின் இலங்கைச் சமூகத்தவர் மத்தியில் குரோதத்தையும் கலவரங்களையும் ஏற்படுத்தலாம் என்று பிரான்ஸ் பொலீஸார் கருதுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனாலேயே இத்தேடுதல் வேட்டை நடத்தப்பட்டதாகவும் -

பிரான்ஸ் கிளையின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் தீவிர விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர் என்றும் -

மேற்படி மாநாட்டுக்கு அழைக்கப்படும் பிரமுகர்களின் பட்டியலை உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி பொலீஸார் அவர்களைப் பணித்தனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

## மாணவர்கள் மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே24

பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளியை மேலும் குறைக்குமாறு கோரி வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.கிளை அலுவலகத்தின் ஊடாக ஜனாதிபதிக்கு நேற்று மகஜர் ஒன்றை அனுப்பிவைத்தனர்.

பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று கட்சியின் மாவட்ட இணைச்செயலாளர் த.தேவகுலநாயகத்திடம் மகஜரைக் கையளித்தனர் என்று அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரைக் கட்சியின் பிரதம அமைப்பாளருக்கு 'பக்ஸ்' மூலம் அனுப்பிவைத்த இணைச்செயலாளர் விரைவில் நடைபெறவுள்ள கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஜனாதிபதியிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டு சாதகமான பதில் பெற்றுத் தரப்படும் என்று மாணவர்களுக்கு உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## ஊர்காவலர் பலி

கொழும்பு,மே24

அம்பாறை மாவட்டத்தில் மகாஓயாவிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் உள்ள தம்பிட்டிய பகுதியில் ஊர்காவல் படையினரின் நிலை ஒன்றின் மீது நேற்று முன்தினம் காலையில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகின்றது. இதில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்ததாகவும், மற்றொரு சிவிலியன் காயமடைந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் மையம் தெரிவித்தது. (உ)

## படக்காட்சி

யாழ்ப்பாணம்,மே24

சாயிபாபாவின் பள்ளிப்பருவ அற்புத நிகழ்வுகளின் வீடியோப் படக்காட்சி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள சாயிபாபா களஞ்சியத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

## அதிபர்கள் கூட்டம்

வலிகாமம் தெற்கு,மே24

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.தற்பரானந்தன் அறிவித்துள்ளார். (ம-152)


சுடர் ஒளி

27.05.2001 இதழ்

- தமிழ்ச்செல்வன் - சொல்ஹெய்ம் சந்திப்பு அட்டைப் படத்துடன் இந்த வார சுடர் ஒளி வெளிவருகிறது.

சுடர் ஒளியில் இடம்பெற்றுள்ள மற்றும் முக்கிய அம்சங்கள்

- பேச்சுப் பற்றிப் பேச்சு! அதுதான் இனித் தொடரும்
- வடக்குப் பிரதிநிதித்துவத்தை மேலும் முடக்கச் சதித்திட்டம்
- புலிகளிடம் ஹெலிக்கொப்டர்கள்: அரசு செய்யும் பிரசார தந்திரமா?
- தமிழ்ச்செல்வன் கொலைச்சதி: அதன் சூத்திரதாரி யார்?
- ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தால் கூட்டணி - ஈபிடிபி சொற்போர்.
- யாழ்ப்பாணத்தில் போரினால் அழியும் சமூகத்தை மதுபாவனை சீரழிக்கும் அபாயம்
- குருமாற்றம்
- ஆறுமாத கெடு முடியும் முன்னர் ஜெயலலிதா அடுத்த வேட்டை
- ஐ.தே.க. எதிர்பார்ப்பது போன்று முஸ்லிம் காங்கிரஸ் மனச்சாட்சிப்படி நடக்குமா?
- சங்கம் வைத்து தமிழ் வளர்த்த இனம் வயிறு வளர்க்க சங்கம் நிறுவலாமா?
- முக்கமிடும் ரோஜா இதழ்கள் - தொடர்கதை

மற்றும் பல சுவையான அம்சங்கள்

(C/16828)




பல்கலைக்கழகத்துக்கான வெட்டுப்புள்ளியைக் குறைக்குமாறு கோரி வெட்டுப் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து ஊர்வலமாகச் சென்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

மகஜர் கையளிப்பதற்காகச் சென்ற மாணவர்களில் ஒரு பகுதியினரையும், சு.க. கிளையின் இணைச் செயலாளர் ரீ.தேவகுலநாயகத்திடம் மாணவர்கள் மகஜர் கையளிப்பதையும் படங்களில் காணலாம். கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஆர்.பி. ஜெயதாஸ், ப.சந்திரகுமார் ஆகியோரும் உடனிருக்கின்றனர். (ம)

## சுகாதார வாரத்தையொட்டி சிரமதானம்

தென்மராட்சி,மே24

சுகாதார வாரத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினர்இன்று மந்திகை ஆஸ்பத்திரியில் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மந்திகை ஆஸ்பத்திரி பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என்.கே.ஞானசுதனின் ஏற்பாட்டில் நகரசபை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரமணியம் விஜயரூபன் (வயது 22), நித்தியானந்தம் நித்தியரூபன் (வயது 21) ஆகியோரே காணாமற்போயுள்ளனர்.

நேற்று இரவுவரை இவ்கள் தொடர்பான எந்தவித தகவலையும் தங்களால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் தெரிவிததுள்ளனர். இந்த ஆண்டு மே மாதம், முதல் இரண்டு வாரகாலப் பகுதியல் கைது செய்யப்பட்ட 15 பேர் காணாமற்போயுள்ளதாகவும் 'தமிழ் நெற்' செய்தி வெளியிட்டுள்ளது. (ம-7)

## 'ராவய'..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எமது கைகளைக் கட்டிப் போடச் சிலர் முயல்கின்றனர்" - என்று ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவித்தார்.

அலுவலகம் மீது வீசப்பட்ட குண்டு படையினர் பயன்படுத்தும் ரகத்தைச் சேர்ந்தது என்றும் -

இதனால் ஆள்களுக்கு காயங்களை ஏற்படுத்த முடியாது என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

1994 ஆம் ஆண்டு அப்போது ஆட்சியில் இருந்த ஐ.தே.கட்சி அரசை அகற்றி விட்டு பொ.ஐ.முன்னணி அரசை ஆட்சிப்பீடம் ஏறவைப்பதில் முன்னின்று உழைத்தவர் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியரான விக்டர் ஐவன்.

தற்போது பொ.ஐ.முன்னணி அரசைக் கவிழ்த்து விட்டு ஐ.தே.கட்சியை ஆட்சிப்பீடம் ஏறவைக்கும் முயற்சியின் பின்னணியில் நின்று உழைத்து வரும் முக்கியஸ்தரும் அவரே என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து அப்பகுதியில் கடும் தேடுதல்களையும் அவர்கள் மேற்கொண்டனர்.

தம்பலகாமம் கண்ணிவெடித் தாக்குதல் மற்றும் துவரங்காட்டுச் சம்பவங்களை அடுத்து திருகோணமலையில நேற்றுப்பகல் பதற்றம் நிலவியது. திருகோணமலையிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்யச் சென்ற தமிழ்ப் பயணிகள் பதற்றம் காரணமாக தங்களது பயணங்களைக் கைவிட்டு வீடு திரும்பினர்.

எனினும் நேற்று முன்னிரவே அங்கு நிலைமை வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.(ம-7)


எமது நேற்றைய வீடியோ CD வெளியீடு

ரஜனிகாந்தின்

அழகேஸ்வரன்

பிரதிகள் உடன் பெறலாம்

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்

(C/16836)


## கிளைமோரில் சிக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

கிளைமோர் வெடித்த இடத்தில் சுமார் 5 அடி ஆழமான குழி ஏற்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இந்த வீதியில் வீதிச் சோதனை மற்றும் துப்புரவுப் பணியில் [illegible]ட்ட பொலீஸாரும் [illegible]ணுவ[illegible] வீதிப் பாதுகாப்பை உறுதி[illegible]திய பின்பே கடற்படையினரின் வாகனத் தொடரணி செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

காயமடைந்த படையினர் திருகோணமலை கடற்படை ஆஸ்பத்திரியிலும், சிறுகாயங்களுக்கு உள்ளானோர் கந்தளாய் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளைமோரில் சிக்கிய பஸ் தூக்கி வீசப்பட்டுக்கிடக்கும் வயலில், உயிரிழந்தவர்களின் சடலங்களும் சிதறிக்கிடந்தன.

தற்போது இந்த வீதியில் வீதி திருத்தும் பணி பெரியஅளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனைச் சாதகமாக வைத்துப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தி உள்ளனர் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் கடற்படையினர் அல்லாத பொதுமக்களும் இருந்திருக்கலாம் என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். படையினர் விடுமுறையில் செல்லும் போது அவர்களது உறவினர்களும் நண்பர்களும் கூட அவர்களுடன் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் சொன்னார். (உ-ம-7)

## இரண்டாவது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் விமானத்தில் திரு[illegible] வலைகள் செய்யப்பட்ட [illegible] [illegible]லாவது சேவையில் செல்லும் பயணிகளை திரும்பவும் ஏற்றிக் கொண்டு இரவு 8.30 மணிக்கு அந்த விமானம் மீண்டும் புறப்பட்டுச் சென்றதாகவும் -

இரவு 9.30 மணியளவில் பயணிகள் இரத்மலானையைச் சென்றடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது விமான சேவையில் இரத்மலானைக்குச் செல்வதற்காக பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பயணிகள், முதலாவது சேவை தாமதமானதை அடுத்து நேற்று மாலையில் மீண்டும் யாழ்.நகருக்கு கூட்டி வந்து விடப்பட்டனர்.

இன்று நடைபெறும் விமானசேவைகளில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று மூன்று விமான சேவைகள் நடைபெறும் என்றும் -

முதலாவது சேவையில் செல்ல விரும்புவோர் பயண ஏற்பாடுகளுடன் காலை 7.00 மணிக்கே யாழ்.சிங்கள மகாவித்தியாலய மைதானத்துக்கு சமுகம் தரும்படி கேட்கப்படுகின்றார்கள் என்றும் -

யாழ்.சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி அவரது அமைச்சின் கீழ்வரும் புதிய விடயங்கள் வருமாறு:-

- சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை.
- மன்னாரில் உள்ள உப்பளங்கள்.
- மத்திய அரசினாலும் வடக்கு-கிழக்கு மாகாண சபையினாலும் வடக்கில் செயற்படுத்தப்படும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி வேலைகளைத் தொடர்புபடுத்தல்.
- 'இலங்கைக் கலைப்பணி மன்றச் சட்டத்'தை செயற்படுத்தும் அதிகாரம் கலாசார அமைச்சின் கீழ் உள்ளது. இனிமேல் அதனைச் செயற்படுத்தும் போது வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சுடன் இணைந்தே மேற்கொள்ளவேண்டும்.

- இந்த அதிகாரங்களையே ஜனாதிபதி புதிதாக அமைச்சர் டக்ளஸுக்கு வழங்கியிருக்கின்றார். (உ)

## 'கிபிர்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரது சொந்தப்பாவனையில் இருந்த கணனி, 'வைன்' மதுபானங்கள், வெளிநாட்டுத் தயாரிப்பு சிகரெட்டுக்கள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

திருடப்பட்ட கணனியில் 'கிபிர்' யுத்த விமானங்களை இயககுவது தொடர்பான மிக முக்கிய தகவல்கள் அடங்கி இருந்ததாகவும் அந்த இணையத்தளம் தெரிவித்தது. (ம-164)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம அந்தஸ்தில் இருந்து பேச்சு நடத்துவதற்கு அனுமதிப்பதை இந்த அமைச்சர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை சமமாக நடத்தக் கூடாது என்றும் -

அவ்வாறு நிகழ்ந்தால் அதனால் அரசாங்கம் கசப்பான பின்விளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் என்றும் -

சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலான அமைச்சர்கள் இந்த விடயங்கள் குறித்து கருத்துக் கூறாமல் மௌனம் சாதித்ததும் குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள இந்த நிலையை அடுத்து இந்த விடயங்கள் குறித்து தெளிவை ஏற்படுத்துவதற்காக இன்று அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து, நாளை வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தையும் எதிர்வரும் திங்கட்கிழமை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டத்தையும் ஜனாதிபதி அவசரமாகக் கூட்ட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)


மலிவு விலையில் புறோயிலர் (Broiler)

புறோயிலர் கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அன்னாபாம்

ஸ்ரேசன் றோட், இணுவில்



யாழ்ப்பாணக் கல்லூரி

பட்டப்படிப்புக்கள் பிரிவு

464, Hospital Rd. Jaffna

A/L, G.A.Q, BA I, BA II

Literature

Linqustics

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

(88140)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.